Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு

தினப்பதிப்பு

THINAMURASU

யாழ் நகரில் ஒரு வான்வழி நிலையம்

SPICE TRAVELS & TOURS (PVT) LTD

IATA

(C706)



412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)

Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 வைகாசி 17 செவ்வாய்க்கிழமை (31.05.2011) பக்கங்கள் 16 ஓசை – 244




2000 தமிழர்கள் மீண்டும் இலங்கைக்கு

08



புறா மலைக்கு பசில்

10





சுரேஷ் கல்மாடிதான் பொறுப்பு

12



தடுப்பதற்கு வழி என்ன?

14

## வருகிறது குட்டித் தேர்தல் தயாராகிறது தேர்தல் திணைக்களம்

(கொழும்பு)

வேட்புமனுக்கள் நிராகரிக்கப் பட்டமையை எதிர்த்து நீதிமன்றத் தில் வழக்குத்தாக்கல் செய்யப் பட்டதனால், பிற்போடப்பட்ட பல உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் எதிர்வரும் யூலை மாதம் 22ஆம் திகதி நடைபெற வுள்ளதாக தேர்தல் திணைக்க ளம் அறிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களுக் கான நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்களை மீள ஏற்றுக் கொள் ளுமாறு நீதிமன்றம் கடந்த 12ஆம் திகதி தேர்தல்கள் ஆணை யாளருக்கு உத்தரவிட்டது.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் போது தாக்கல் செய்யப்பட்டிருந்த வேட்புமனுக் கள் நிராகரிக்கப்பட்டிருந்தமைக்கு எதிராக ஏராளமான வழக்குகள் கட்சிகளாலும், சுயேச்சைக் குழுக்களாலும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினால் தாக்கல் செய் யப்பட்டவற்றில் நிராகரிக்கப்பட்ட 33 வேட்பு மனுக்களும், ஐ.தே.க. வின் இரண்டு வேட்புமனுக்களும் மீள ஏற்றுக் கொள்ளப்பட்டன.

தற்போதைய நிலையில் மீளத தேர்தல் நடாத்தப்படும் போது நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்க ளும் நீதிமன்ற உத்தர வின் கார ணமாக ஏற்றுக் கொள்ளப்படும் நிலை உருவாகியுள்ளது.

## தனியார் ஓய்வூதியத் திட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தம்

(கொழும்பு)

உத்தேச தனியார் ஓய்வூதி யத் திட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்தி வைப்பதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ள தாக அரசாங்க தகவல் திணைக் களம் அறிவித்துள்ளது. நேற்று மாலை நடைபெற்ற சுதந்திரக் கட்சியின் மத்திய குழு கூட் டத்தின்போதே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தனியார் துறை ஓய்வூதியத் திட்டத்தில் ஊழியர்களின் விருப் பத் தெரிவுக்கு ஏற்ப மாற்றங்க ளைச் செய்து கொள்வதற்கு அரசு முன்வந்துள்ளது.

உத்தேச தனியார் ஓய்வூதியத் திட்டம் ஊழியர்க ளின் விருப்பத் தெரிவுக்குரியது எனவும் அவர் கள் இத்திட்டத்திற் குத் தேவை யான 120 மாத கால சேவை யைப் பூர்த்தி செய்ய முன்னர் பணியொன்றிலிருந்து வில கினால் தமது பங்களிப்புக்கான

(15ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் சூடு கிளப்பியது இலங்கை விவகாரம்

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் 17ஆவது கூட்டத்தொடர் நேற்று ஆரம்பமானபோது அனைவரும் எதிர்பார்த்தது போல இலங்கையில் இறுதி யுத்தத்தின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பான விடயங்கள் மிகவும் காரசாரமாக விவாதிக்கப்பட் டிருக்கிறது.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் யுத்தக் குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணைப் முறையொன்றை உடனடியாக செயற்படுத்த வேண்டுமென ஐநா மனித உரிமைகள் ஆணை யாளர் நவநீதம்பிள்ளை மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் நிபுணர் குழுவின் அறிக்கை யில் உள்ளக்கடக்கப்பட்டிருக்கும் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்த இலங்கை அரசாங்கம் உட னடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அவசியமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்றுக் காலை ஜெனிவாவில் ஆரம்பமான ஐ.நா. மனித உரிமை சபையின் 17ஆவது கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்தபின் விசேட அறிக் கையொன்றைச் சமர்ப்பித்து உரையாற்றும்போதே நவநீதம்பிள்ளை இதனை குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் (15ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு உதவுங்கள் பாதுகாப்பு சபையில் பாகிஸ்தான்

(கொழும்பு)

தேசிய நகர்வுகள் மூலம் இலங்கையில் அமைதியை வென்றெடுப்பதற்கு அனைத் துலக சமூகம் உதவ வேண்டும் என்று பாகிஸ்தான் கேட்டுக் கொண்டுள்ளது.ஐ.நா. பாதுகாப் புச்சபை கவுன்ஸிலின் நேற்றைய கூட்டத் தொடரில் உரையாற்றிய பாகிஸ்தான் தூதுவர் சமீர் அக்ரம் இவ் வாறு கேட்டுக் கொண்டார்.

ஐ.நா.வின் போர்க்குற்ற அறிக்கை குறித்து கருத்து வெளி யிட்டுள்ள அவர், இது இரண் டாம் தரப்பின் தகவல் களை அடிப்படையாக வைத்து தயாரிக் கப்பட்ட ஆரம்பநிலை அறிக்கை என்றும், பகுப்பாய்வு செய்யப் படாதது என்றும் கூறியுள்ளார்.

## மோப்ப நாய் 'ஸ்னோவி' உயிரிழந்தது



கொமாண்டோ "ரணவிக்கிரம ஸ்னோவி" உயிரிழந்தது புலிக ளுக்கு எதிரான போரில், கொமாண்டோப் படையினரின் வழி காட்டியாகச் செயற்பட்ட போது, காயமடைந்திருந்த ஸ்னோவி என்ற நாய் கடந்த 24 ஆம் திகதி உயிரிழந்துள்ளது. 4ஆவது கொமாண்டோ படைப் பிரிவின் கோப்ரல் சம்பத் இந்த நாயை 2004ஆம் ஆண்டு தொடக்கம் பயிற்சி கொடுத்து பராமரித்து வந்தார்.

இராணுவத்தில் எஸ்-080 என்ற இலக்கம் வழங்கப்பட்டி ருந்த இந்த நாய் வெலிஓயா மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் புலிகளின் மறைவிடங்களைத் தேடிக் கண்டு பிடிக்கும் நடவடிக் கைகளில் முக்கிய பங்கு வகித்தது.

2008 மார்ச் 15ஆம் நாள் கெம்பிலிஓயா காட்டுப்பகுதியில் நடந்த மோதல் ஒன்றின்போது கொல்லப்பட்ட (15ஆம் பக்கம் பார்க்க)

## ஜெயலலிதாவைச் சந்திக்க துடிக்கிறார் ரணில்





(கொழும்பு)

தமிழக முதலமைச்சர் ஜெய லலிதாவை விரைவில் சந்திக்க உள்ளதாக, எதிர்க் கட்சித் தலை வர் ரணில் விக்ரமசிங்க இந்திய ஊடகங்களுக்குத் தெரிவித்துள் ளார். மூன்று நாட்கள் உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு ரணில் விக்ரமசிங்க இந்தியா சென்றுள்ளார். டெல்லி செல்லும் (15ஆம் பக்கம் பார்க்க)

## யுத்த வெற்றி அனுபவப் பகிர்வு மகாநாடு

# உலக நாடுகள் பல பகிஷ்கரிப்பு நிகழ்ச்சி நிரலை மாற்றியது அரசு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடனான யுத்தத் தின்போது பெற்றுக்கொண்ட அனுபவங் களைப் பகிர்ந்து கொள்ளும் முகமாகக் கொழும் பில் ஆரம்பமாகும் இன்றைய மகாநாட்டை மேற்கு உலகின் முக்கிய நாடுகள் பகிஸ்கரித்துள்ளன.

ஐ.நா. நிபுணர் குழுவின் யுத்தக் குற் றம் தொடர்பான அறிக்கை வெளியான தைத் தொடர்ந்து இலங்கை அரசு மீது சர்வதேச அழுத்தங்கள் அதிகரித்துள்ளன.

இந்நிலையில், இன்று கொழும்பில் ஆரம்பமாகும் யுத்த வெற்றியின் அனுப வப் பகிர்வு மகாநாட்டை அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் பல பகிஸ் கரித்துள்ளன. இலங்கை அரசாங்கம் 54 நாடுகளுக்கு அழைப்பு விடுத்தபோதிலும் இதில் 12க்கும் மேற்பட்ட இந்த மாநாட் டில் கலந்து கொள்ளவில்லை என அறிவித்துள்ளன.

புலிகளுக்கு எதிரான இராணுவ நடவ டிக்கைகள் தொடர்பிலான அனுபவங்கள் ஏனைய நாடுகளுக்கு உதவியாக அமை யும் என இலங்கை கருதுகிறது.


எனினும், அமெரிக்கா, பிரித்தானியா, சுவிட்சர்லாந்து, அவுஸ்திரேலியா, பிரான்ஸ், ஜப்பான் உள்ளிட்ட பல நாடுகள் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை.

சீனா மற்றும் ரஸ்யா ஆகிய நாடுகள் இந்த மாநாட்டில் கலந்து கொள்ள வுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மனித (15ஆம் பக்கம் பார்க்க)

# எழுவைதீவில் வைத்தியசாலை

## முதன் முறையாக நேற்று ஆரம்பம்



(கொழும்பு)

முதன் முறையாக யாழ்.எழுவைதீவுப் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட வைத்தியசாலை நேற்று திங்கட்கிழமை திறந்துவைக்கப்பட்டது. ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மங்கள விளக்கேற்றல் மற்றும் இறை வணக்கம் ஆகியவற்றுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலென்டினும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம், வடமாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன், வைத்தியக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன், வைத்தியக் கலாநிதி நோயல் நடேசன் மற்றும் கலாநிதி சியாமளா நடேசன் ஆகியோரும் கலந்துகொண்டனர். கௌரவ விருந்தினராக ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையைச் சேர்ந்த அருணா புண்ணியமூர்த்தியும், பொறியியலாளர் மா. இராமதாஸும் கலந்துகொண்டனர்.

தொடர்ந்து விருந்தினர்கள் உரை நிகழ்த்தப்பட்டது.

இதனையடுத்து வைத்தியசாலைக் கட்டடத்தினை நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலென்டின் மற்றும் வைத்தியக் கலாநிதி நடேசன் ஆகியோர் நாடாவை வெட்டித் திறந்துவைத்தனர்.

இந்த நிகழ்வில், பாடசாலை மாணவர்கள், பிரதேச மக்கள் உட்பட்ட பலர் கலந்துகொண்டனர்.

யாழ்.எழுவைதீவுப் பிரதேசத்தில் வைத்தியசாலை அமைப்பதற்கான அடிக்கல்லினை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அண்மையில் நாட்டிவைத்தார். வைத்தியக் கலாநிதி நோயல் நடேசனின் நிதியுதவியுடனும், கனடாவாழ் தமிழ் மக்களின் நிதியுதவியுடனும் இந்த வைத்தியசாலை அமைக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## கடவுச்சீட்டு விண்ணப்பம் தாய்மொழியில் பூரணமாக்கலாம்

(யாழ்ப்பாணம்)

இதுவரை காலமும் ஆங்கிலத்தில் மட்டுமே பூரணப்படுத்தப்பட்டு வந்த கடவுச்சீட்டு விண்ணப்பத்தை இனி தாய்மொழியிலும் பூரணப்படுத்த முடியும் என தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் செயலாளர் டபிள்யு.கே.விலேகொட தெரிவித்துள்ளார். பன்னாட்டுத் தேவைப்பாடுகளுடைய கடவுச் சீட்டு விண்ணப்பம் ஆங்கிலத்தில் மட்டுமே பூர்த்தி செய்யவேண்டும் என இதுவரை கட்டாயமாக்கப்பட்டிருந்தது. இதனால் ஆங்கிலமொழி தெரியாத பலர் தமது விண்ணப்பங்களைப் பூர்த்திசெய்வதற்கு சிரமப்பட்டனர். இதனைக் கருத்திற்கொண்டு விண்ணப்பிப்பவர் தமது தாய்மொழியான தமிழ், சிங்களத்தில பூர்த்திசெய்யமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (கா)

### இன்று தேர்த்திருவிழா

சாவகச்சேரி பெரியமாவடி கந்தசுவாமி கோவிலில் கடந்த ஒன்பது தினங்கள் உற்சவம் இடம்பெற்று இன்று தேர்த்திருவிழாவும், நாளைய தினம் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (வி)

# பசுமை உலகை நோக்கி மர நடுகை இயக்கம்



(யாழ்ப்பாணம்)

எல்.பி.பினான்ஸ் பி.எல்.சி. நிறுவனத்தினர் தனது 40 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு ஏற்பாடு செய்திருந்த மரநடுகை வைபவம் நேற்று சுப்பிரமணியம் சிறுவர் பூங்காவில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் யாழ்.மாநகர சபை முதல்வரின் செயலாளர் பற்குணராசா மற்றும் மேற்படி நிறுவனத்தின் யாழ்.பிராந்திய முகாமையாளர்களான திரு.நிறஞ்சன், திரு.ஜங்கரன் ஆகியோர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## அதிகரிக்கிறது மதுப் பாவனை; வடமராட்சியில் வீதி விபத்துக்கள்

(வடமராட்சி)

வடமராட்சி பகுதியிலுள்ள சிலர் மது அருந்திவிட்டுப் போதையில் துவிச்சக்கரவண்டியில் செல்வதால் வீதியால் பயணம் செய்யும் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதுடன் வீதி விபத்துக்கள் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பகுதியிலுள்ள பிரதான வீதிப்பகுதியில் மதுப்பிரியர்களின் இவ்வாறான செயற்பாட்டால் வீதியால் பயணம் செய்யும் மக்கள் வாகனங்களுடன் மோதி விபத்துக்கள் ஏற்படும் அபாயநிலை காணப்படுவதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் மாலுசந்திப் பகுதியில் துவிச்சக்கர வண்டியில் மது அருந்திவிட்டு மதுமயக்கத்தில் வந்த ஒருவர் அருகே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விழுந்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு மதுப்பிரியர்களின் நடவடிக்கைகளால் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்ற நிலையில் இது தொடர்பாக உரியவர்கள் கவனம் எடுத்து இவர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கவேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (100)

## சாரதி அனுமதிப் பத்திரம் பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சாரதி பயிற்சிக் கல்லூரி ஊடாகவும், தனித்தும் சாரதி அனுமதிப் பத்திரத்திற்கு விண்ணப்பித்தவர்களில் எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றியவர்களின் பெறு பேறுகள வெளியிடப்பட்டுள்ளது.

பெறுபேறுகள் யாழ். மாவட்ட செயலக மோட்டார் போக்குவரத்துப் பிரிவில், உரியவர்கள் தமது அனுமதி சுட்டெண் சகிதம் சென்று பார்வையிடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது..

## வீட்டுத்தோட்டசெய்கை; படையினர் ஊக்குவிப்பு

(சாவகச்சேரி)

பாதுகாப்புப் படையினரின் அனுசரணையுடன் தென்மராட்சி மற்றும் வடமராட்சிப் பகுதி விவசாயிகளுக்கு வீட்டுத தோட்டத்திற்கான விதைகள் வழங்கப்பட்டுள்ளது.

நேற்று தென்மராட்சி கலாசார மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் 52 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி அனுர சுதசிங்க பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். இந்நிகழ்வில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு விதைகள் இலவசமாக வழங்கப்பட்டது. அத்துடன் வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கை தொடர்பாக விபரணப் படக்காட்சியும் காண்பிக்கப்பட்டு விளக்கப்பட்டது. (11)

## மாணவர்களுக்கு கற்றல் உபகரணம்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச செயலக சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தினால் வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் துவிச்சக்கர வண்டி வழங்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு தென்மராட்சி கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மு.சந்திரகுமார் மற்றும் சில்வேஸ்திரி அலென்ரின் ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக ஈ.பி.டி.பி. தென்மராட்சிப் பிரதேச அமைப்பாளர் சூசைமுத்து அலெகசாண்டர் (சாள்ஸ்) மாவட்ட சமுர்த்தி ஆணையாளர் ரி.மகேஸ்வரகுமார், மாவட்ட சமுர்த்தி ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஆ.ரகுநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (19)

## சமுர்த்திப் பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவித்திட்டம்

(கட்டுவன்)

சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபையினால் யாழ்.மாவட்ட மீள் சுழற்சி முறையில் வாழ்வாதார உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் பிரகாரம் அளவெட்டி சமுர்த்தி வங்கியினால் குறித்த பிரதேசத்தில் சில கிராம அலுவலர் பிரிவிலுள்ள வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் சமுர்த்திச் சிறு குழுவில் இணைக்கப்பட்டுள்ளவர்களுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக இவ் உதவித்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் ஜே/216, ஜே/221, ஜே/222, ஜே/224 ஆகிய கிராம அலுவலர் பிரிவிலுள்ள சமுர்த்தி பயனாளிகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

ஜே/216 கிராம அலுவலர் பிரிவில் 5 தையல் இயந்திரமும் ஜே/221 கிராம அலுவலர் பிரிவில் 2 தையல் இயந்திரமும் கோழி வளர்ப்பை மேம்படுத்துவதற்கான கடன் திட்டமும் வழங்கப்பட்டுள்ளது.

ஜே/222 கிராம அலுவலர் பிரிவில் கோழி வளர்ப்பிற்கான கடன் உதவியும் 2 தையல் இயந்திரமும், 2 நீர் இறைக்கும் இயந்திரங்களும், ஜே/224 கிராம அலுவலர் பிரிவில் மாடு வளர்ப்புக்கான கடன் உதவிகளும் வழங்கப்பட்டுள்ளது. (22)

## ஆயுர்வேத மருத்துவம் பிரதேசக் குழுக்கள் அமைப்பு

(கட்டுவன்)

ஆயுர்வேத பாதுகாப்புச் சபையினால் ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவிலும், பிரதேச சபைச் செயலாளர் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டு செயற்பட்டுவருவதாகத், தெரிவிக்கப்படுகிறது.

ஒவ்வொரு மாதமும் இக்குழு கூட்டமொன்றை நடத்தி ஆயுர்வேத மருத்துவச் செயற்பாடுகளை மேற்கொண்டுவருகிறது. தெல்லிப்பளைப் பிரதேச செயலக குழுவிற்கான கூட்டம் எதிர்வரும் 10 ஆம திகதி பிற்பகல் 3 மணிக்கு தெல்லிப்பளை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (22)


## காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் கீழ்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல | பதவி | பதவிக் குறியீட்டு இலக்கம் | சம்பள அளவுத்திட்டம் 66/2006 |
|---|---|---|---|
| 1. | கணக்காளர் | 104/09 | 10950-130x10-140x10-13650 |
| 2. | உட்துறைக் கணக்காய்வாளர் | 105/11 | 10450-100x40-110x10-12550 |
| 3. | வர்த்தக முகாமையாளர் | 106/10 | 10700-120x10-130x10-13200 |
| 4. | கிளைமுகாமையாளர் | 208/14 | 9700-80x10-85x10-11350 |
| 5. | எழுதுனர் | 302/15 | 9450-75x10-80x10-11000 |
| 6. | விற்பனையாளர் | 308/17 | 8950-65x10-70x10-10300 |

+ கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு சுற்றுநிருபப்படி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட இதரபடிகளும் வழங்கப்படும்.
+ வயதெல்லை 18 - 45 (சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது) கூட்டுறவுச் சங்கத்தில் தற்போது கடமையாற்றுபவர்கள் சங்கத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.
+ விண்ணப்பப் படிவத்தினை தலைமை அலுவலகத்தில் ரூபா 20 செலுத்திப் பெற்றுக்கொள்ளவும். விண்ணப்பப்படிவத்துடன தகமை தொடர்பான விபரங்களும் இணைக்கப்பட்டுள்ளது.
+ தெரிவு செய்யப்படுபவர் கூட்டுறவுச் சட்ட ஏற்பாட்டுகளுக்கு அமைய பிணைப்பணம் செலுத்துதல் வேண்டும்.

மேற்படி பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பத்துடன் கல்விச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், அனுபவச் சான்றிதழ் ஆகிய வற்றின் பிரதிகள் இணைக்கப்பட்டு விண்ணப்பங்கள் யாவும் 17.06.2011 ஆம திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தலைவர், ப.நோ.கூ.சங்கம் காரைநகர் என்ற முகவரிக்குப் பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

தபால் உறையில் இடதுபக்க மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர், குறியீட்டு இலக்கம் தவறாது குறிப்பிடல் வேண்டும். கூட்டுறவுச் சங்கங் களில் கடமையாற்றிய பணியாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தலைவர்,

ப.நோ.கூ.சங்கம் (வ-து), காரைநகர். (C/738)

வாழ்க்கையில் கட்டுப்பாடு இருந்தால்தான் ஒழுக்கத்தோடு முன்னேற முடியும். கட்டுப்பட்டு நடப்பதற்கு அடக்கம் முதலில் வேண்டும். அகங்காரம் போனால்தான் அடக்கம் வரும்.

-காஞ்சிப் பெரியவர்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## பகையும் பகிர்வும்

வன்முறையின் தோல்வியை மிகப்பெரிய இழப்புகளுடன் அனுபவித்து விட்டோம். அது முடிவுக்கு வந்து இரண்டு ஆண்டுகள் கடந்து விட்டன.

சில சில்லறை வெற்றிகள் மூலம் வன்முறையின் மீதான நம்பிக்கை நமக்குள் ஓங்கி வளர்ந்திருந்த சமயத்தில் நம் பிரச்சினைக்குத் தீர்வு கான வேறு வழிகள், ஏனைய சாத்தியங்கள் இருப்பதாகவே அது நம்மை நம்பவோ சிந்திக்கவோ விடவில்லை.

இப்போது நம் சிந்தனைகளில் நிதானத்தையும் துணிச்சலையும் கொண்டுவர முடியும். நாம் சிந்தித்திருந்தவைகளில் என்ன கோளாறுகள் இருந்தன என்பது பற்றிப் பகுப்பாராய்வு செய்ய முடியும். வன்முறையை வன்முறையால் வெற்றி கொள்ளலாம் என்று நம்பிவிட்டால், நம் வன்முறையை உண்டு மேலும் மேலும் வளர்கிறது எதிர்வன்முறை என்பதைக் காணும் நிதானம் கைகூடாவிட்டால், எதிர்வன்முறை மீதான அச்சம் மிகைப்பட மிகைப்பட நமக்கான வன்முறையாளரை நாமே விரும்பிக் கெஞ்சும் நிலைக்கு வருகிறோம். அப்படிப்பட்ட நிலைக்குத்தான் நாம் வந்திருந்ததை இன்று ஒரு பின்னோக்கிய விமர்சனப் பார்வையில் புரிந்து கொள்ள முடியும்.

மக்களைப் பிணித்து ஒரு கூட்டியக்கத்தைச் சாதிக்க ஒரு சமயம் உதவிய அதே நம்பிக்கை, தனது உபரியான நிலையை விட முக்கியத்துவம் பெற்றுவிடும்போது, அது உடனடியாகப் பேரபாயத்திற்கும் அழிவிற்கும் வழிவகுத்துள்ளதே சரித்திரம். அதையே நமது சரித்திரத்தின், சற்றுமுன் கடந்த அத்தியாயத்திலும் எழுதினோம். இரண்டு சமூகக் குழுக்களிடையே வெறுப்பு வளர்க்கப்படும் விதமும், வன்முறை வீரமாக்கப்படுவதும், தேசியப் பற்றானது மாற்றுத் தேசியங்கள் மீதான வெறுப்பாக வளர்ந்து நம்மை இழுத்துச் செல்லும் இடமும் நாம் கண்டுவிட்டோம்.

இனியும் அதே பழகிய தடத்திலேயே நாம் சுற்றிச் சுற்றி நடைபழக முடியாது. அதாவது வீரமும் பகைவெறுப்புமான ஆவேச அலைகளிலேயே நாம் செல்லுமிடம் அறியாது மிதந்து செல்ல முடியாது. 'இந்த நாட்டில் ஆட்சிக்கு வரும் அரசுகள் ஒருபோதும் சரிவர மாட்டுது' என்ற கண்டுபிடிப்பையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. எவரேனும் வெளியார் வந்துதான் நம்மைக் கடையேற்றுவர் என்று நப்பாசைகளை விநியோகித்தபடியும் நாம் காத்திருக்க முடியாது. நிதர்சனத்தை உணர்ந்து நம்மால் ஆகக்கூடியதைப் பார்க்க வேண்டிய விவேகம் நமக்குக் கைகூடவேண்டும்.

எழுத்தாளர் ஆதவன் தன் நாவலொன்றின் முன்னுரையில் எழுதியிருப்பார், ஒரு பெண் அயல்வீட்டுக்காரருடன் ஓடிவிட்டாள் என்றறிந்தால் எல்லோருக்கும் யாரைத் திட்டவேண்டும் என்பது உடனே தெரிந்துவிடுகிறது. எனக்கோ ஒரு சமயம் அவளுக்காகவும், மறுசமயம் அவள் கணவனுக்காகவும், அடுத்து அவள் கூடச் சென்றவருக்காகவுமென மனம் மாறி மாறி அல்லாடும். அவர்கள் ஒவ்வொருவர் நியாயத்தையும் தேட மனம் தவிக்கும் என்பது போல எழுதியிருப்பார்.

இப்படியான பலபக்க நியாயங்களையும் அலசிப் பார்க்கும் மனநிலையே, நம்மை அடுத்தடுத்த நகர்வுகளுக்கு வழி காணச் செய்யும். ஒரே உண்மையை நம்பி அதிலேயே நின்று கொண்டிருப்பது, நம்மை மேலே செல்ல விடாது. தேடலையும் நிறுத்திவிடும்.

நம்முள் படிந்திருக்கும் பழைய வீராவேச எண்ணங்களிலிருந்து நாம் வெளிவர வேண்டும். யதார்த்தத்தின் கேள்விகளை துணிச்சலுடன் எதிர்கொள்ள வேண்டும். தனியே நமக்கொரு குணமுண்டு என்று மற்றவர்களைப் பகைத்துக் கொள்வதல்ல; மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்வதே மனித வாழ்வு.

-ஆசிரியர்-

# போர்க் குற்றச்சாட்டுத் தொடர்பாக ஜனாதிபதி மகிந்தவிற்கு பாதிப்பில்லை

## சென்னையில் வைத்து ரணில் பேட்டி

(சென்னை)

ஐ.நா.வின் குற்றவியல் நீதிமன்றில் இலங்கை உறுப்பு நாடாக இல்லை. இது தொடர்பான ஒப்பந்தத்திலும் இலங்கை கைச்சாத்திடவில்லை. எனவே இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றம் தொடா பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படமாட்டாதெனவும், தற்போது இது தொடர்பாக விசாரணையே இடம்பெற்று வருவதாகவும் ஐ.தே.க. தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

புதுடில்லியில் செல்லும் வழியில் சென்னை விமான நிலையத்தில் இறங்கிய ரணில், அங்கு நிருபர்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது-

இலங்கையில் தமிழர்கள் மறுகுடியமர்த்தும் பணிக்காக இந்திய அரசு வழங்கிய ஆலோசனையின் பேரில் இந்தியா-இலங்கை வெளியுறவுதுறை மந திரிகள், செயலாளர்கள் கொணட குழு அமைக்கப்பட்டுள்ளது. இதன மூலம் இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு நல்ல பலன் கிடைக்கும் என்று நம்புகிறேன். தமிழக முதல்-அமைச்சர் ஜெயலலிதா தன்னைச் சந்திக்க வருமாறு எனக்கு அழைப்பு விடுத்திருந்தார். இது மகிழ்ச்சி அளிக்கிறது. ஓரிரு தினங்களில் அவரைச் சந்திப்பேன். இவ்வாறு அவர கூறினார். பின்னர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் காலை 6.30 மணிக்கு விமானம் மூலம் டில்லி புறப்பட்டுச் சென்றார்



# யுத்தத்தால் அழிந்தது தென்னை வளம் பளைப் பிரதேசத்தில் மீள்நடுகை துரிதம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் அதிக தென்னை வளத்தினைக் கொண்ட பளைப்பிரதேசத்தில் தென்னம் பிள்ளைகளினை மீள்நடுகை செய்வதில் தென்னைப் பயிர்ச் செய்கைத் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

கடந்த கால யுத்த நடவடிக்கையினால் இப்பிரதேசத்தில் காணப்பட்ட தென்னை மரங்களின் பெரும் பகுதி அழிவடைந்தது. இதனை அடுத்து தெனனை வளத்தினை அதிகரிக்கும் முகமாக இத்திணைக்களத்தினால் மீள் நடுகை செயற்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தென்னைப் பயிர்செய்கைத் திணைக்களம் அமைந்துள்ள பளைப்பகுதி நிலப்பரப்புகள் உழவு இயந்திரங்கள் மூலம் பதனிடப்பட்டு பாரிய இயந்திரங்கள் மூலம் கிடங்குகள் வெட்டப்பட்டு . தென்னம்பிள்ளைகள் நடுகை செய்யப்பட்டு வருகிறது.

இதனைவிட இத்தென்னம் பிளைகளுக்கு நடுவில் வாழை மரங்களும் நடுகை செய்யப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (42)

# ஏ-9, ஏ-35 வீதிகளை அகலமாக்கி புனரமைக்கும் பணிகள் துரித கதியில்

(பரந்தன்)

ஏ-9 வீதி மற்றும் ஏ-35 பரந்தன் முல்லைவீதி என்பன வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் அகலமாக்கும் பணி முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஏ-9 வீதியில் பரந்தனில் இருந்து பளைவரையுமான பகுதியில் தற்சமயம் வீதி அகலமாக்கும் பணிகள் நடைபெற்று வருவதுடன், அப்பகுதியில் அமைந்துள்ள பாலங்கள், மதகுகள் போன்றவையும் அகலமாக்கி நிர்மாணிக்கப்படும் பணிகளும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன் காரணமாக வீதியின் இருமருங்கிலும் காணப்படும் பாரிய மரங்களும் அங்கிருந்து அகற்றப்பட்டு வருகின்றன.

இதேவேளை முல்லைத்தீவு-பரந்தன் வீதியில் பரந்தன் சந்தியில் இருந்து இரண்டாம் கட்டைப்பகுதிகளுக்கிடையில் மதகுகள் அகலமாக்கும் பணிகள் என்பனவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் முன்னெடுக்கப்பட்டுவருகிறது. இவ்வீதி மிகவும் சேதமடைந்த நிலையில் கிரவல வீதியாக மாறியுள்ளதுடன், இதனால் பயணம் செய்யும் பயணிகளும் நாளாந்தம் மிகுந்த அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (பா)

## புதிய அதிபர் நியமனம்

(வேலணை)

வேலணை சேர்.வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயத்திற்கு புதிய அதிபராக சிவசுவாமி கிருபாகரன் நியமிக்கப்பட்டுள்ளதாக கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

இணுவில் மத்திய கல்லூரி அதிபராகக் கடமையாற்றிய இவர், 1ஏபி பாடசாலை அதிபராக இருந்த பொ.அருணகிரிநாதன் வேலணை வலயக்கல்விப் பணிமனைக்கு பதவியுயர்வு பெற்றுச் சென்றதை அடுத்தே குறித்த வித்தியாலயத்திற்கு சிவசுவாமி கிருபாகரன் புதிய அதிபராக நியமிக்கப்பட்டுள்மை குறிப்பிடத்தக்கது. (23)

## பௌர்ணமி தின விழா

(பருத்தித்துறை)

வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் மாதாந்தம் நடாத்தப்பட்டு வரும் பௌர்ணமி தின விழா ஜூலை மாதத்தில் வடமராட்சியில் நடாத்தப் படவுள்ளது.

ஜூலை மாதத்தில் இவ்விழாவினை வடமராட்சி கல்வி வலயத்தில் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இந்நிகழ்வு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய கலை அரங்கில் நடாத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது. வடமராட்சி கல்வி வலய முன்னணிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இவ்விழாவில் இடம்பெறவுள்ளன. (109)

## அமரர் தாவீது அடிகளாரின் 30 ஆவது ஆண்டு நினைவு

(யாழ்ப்பாணம்)

அமரர் கலாநிதி வா.சி.தாவீது அடிகளாரின் 30ஆவது ஆண்டு நினைவுதினம் நாளை புதன் கிழமை காலை 6 மணிக்கு இல.5, கோவில் வீதியில் உள்ள யாழ்அருள் ஆச்சிரமதத்தில் அனுஷடிக்கப்படவுள்ளது.

அமரர் தாவீது அடிகளின் ஆன்ம சாந்திக்கா பூசை ஒப்புக்கொடுக்கும் நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஞானம் தமிழ்த் தூது தாவீது மன்றம் அழைப்பு விடுத்துள்ளது.

## வலயமட்ட பரீட்சை

(பருத்தித்துறை)

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் இரண்டாம் தவணைப் பரீட்சையினை வலய மட்டத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கமைய மாணவர்களின் விபரங்களை வகுப்பு, பாடரீதியாக வடமராட்சி வலயக் கல்வி அலுவலக கல்வி அபிவிருத்திப் பிரிவுக்கு ஜூன் முதலாம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார். (109)

## நிர்வாகிகள் தெரிவு

(யாழ். நிருபர்)

அத்தியார் இந்துக்கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச்சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் அதிபர் இ.குணநாதன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் இ. குணநாதன் (அதிபர்), செயலாளர் க. சண்முகநாதன், பொருளாளர் திருமதி ச. சஞ்சிவ், நிர்வாக சபை உறுப்பினர்களாக அ. பேரின்பநாயகம், ம.சசிகுமார், திருமதி எஸ். கணேசானந்தன், ஜ.சிவராசா, சு. சண்முகவடிவேல், கே. நடராசா, போ. கிருஷ்ணகுமார், ஆ.சுமதி, ஆ.சசிதேவி, சி. சிவசக்தி, அ. ஸ்ரீகாந்தன், க.தர்மலிங்கம், சி.சுந்தரலிங்கம், பொ. சரவணபவானந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (10)

## வருடாந்த திருவிழா

(முரசுமோட்டை)

கிளிநொச்சி - முரசுமோட்டை சதாசகாய மாதா ஆலயத்தின் வருடாந்த திருவிழா நேற்று முன்தினம் காலை விசேட வழிபாடு ஆராதனைகளுடன் ஆரம்பமாகி நடைபெற்றது.

இவ் ஆராதனையில் கிளிநொச்சி மறைக்கோட்ட அதிவணக்கத்திற்குரிய அ.யாவீஸ் அடிகளார் மற்றும் அருட்சகோதரிகள் பலர் கலந்துகொண்டனர்.

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட நிலையில் இவ்வருடம் இவ்வாலயத்தின் வருடாந்தத் திருவிழா சிறப்பாக நடைபெற்றுள்ளதாகவும், இதில் பல எண்ணிக்கையிலான மக்கள் கலந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (110)

# பின்தங்கிய பிரதேசங்களின் அபிவிருத்தியுடன் சிறார்களின் கல்வி அறிவையும் மேம்படுத்தவேண்டும்

### ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்

(யாழ்ப்பாணம்)

பின்தங்கிய பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதுடன் அப்பிரதேசங்களில் உள்ள சிறார்களின் கல்வி அறிவையும் மேம்படுத்தவேண்டி உள்ளது. இதன் மூலம் எதிர்காலச் சந்ததியினரின் நிலையான அபிவிருத்திக்கு முயற்சி செய்ய வேண்டுமென ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலென்ரின் (உதயன்) தெரிவித்தார்.

ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் ஏற்பாட்டில் திருநகர் கிராமத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 'சனச' அபிவிருத்தி வங்கியின் கடன் வழங்கும் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். மாநகரசபை உறுப்பினர் எஸ். விஜயகாந் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது,

கடந்த கால யுத்தத்தினால் அனைத்தையும் இழந்து நிர்க்கதிக்குள்ளான நிலையில் மக்களுக்கு எந்த வகையில் உதவிகளைச் செய்யலாம் என நினைத்து அதற்கேற்ப நாம் செயற்பட்டு வருகின்றோம். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களினால் கைத் தொழிலினை மேம்படுத்தும் வகையிலும், கணவனை இழந்த மற்றும் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பத் தலைவிகளுக்கு கைத் தொழில் பயிற்சிகளும், வேலை வாய்ப்புக்களும் வழங்கப்பட்டு வருகின்றன.



கடந்த சில வாரங்களுக்கு முன்னர் இப்பிரதேச மக்களுடன் கலந்துரையாடி அவர்களது தேவைகள் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களிடம் தெரியப்படுத்தியமைக்கு அமைய நிதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிதி மூலம், பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள மாணவர்களின் கல்வி அறிவை மேம்படுத்தும் அதேவேளை, பிரதேச அபிவிருத்தியிலும் நாம் அக்கறை செலுத்தவேண்டும். உங்கள் பிரதேச அபிவிருத்திதொடர்பான எமது செயற்பாடுகளுக்கு உங்களது பங்களிப்பும் ஒத்துழைப்பும் அவசியம் என்று கூறினார்.

மேலும், கடன் தொடர்பான தெளிவூட்டல்களை சனச அபிவிருத்தி வங்கியின் யாழ். கிளை முகாமையாளர் பொ. அச்சுதம்பிள்ளை வழங்கினார்.

இந்நிகழ்வில் சனச அபிவிருத்தி வங்கியின் உத்தியோகத்தர்கள் மற்றும் அக்கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். சனச அபிவிருத்தி வங்கியால் ஐந்து பேர் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டு குழு ஒன்றிற்கு தலா ஐம்பதாயிரம் ரூபா வீதம் கடனுதவி வழங்கப்படவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## பன்மைத்துவ கலாசாரம் ஊடாக சமாதானம்; கரவெட்டிக் கோட்ட சித்திர, கவிதைப்போட்டி முடிவுகள்

பன்மைத்துவ கலாசாரம் ஊடாக சமாதானம் என்னும் தொனிப்பொருளில் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடைபெற்ற சித்திர, கவிதைப்போட்டியில் வெற்றிபெற்ற கரவெட்டிக்கோட்ட பாடசாலை மாணவர்களின் விபரம் வருமாறு:

**சித்திரப்போட்டி**

**பிரிவு - 1**

ர. சங்கவி (நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை), பி. இந்து (மணியகாரன் தோட்டம் அ.த.க.பாடசாலை),க. துளசிகா (துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்),

**பிரிவு- 2**

ர. ஆர்த்திகா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), அ. அன்ரன் சைமன் (வதிரி திருஇருதயக் கல்லூரி), கி. கேகஜன் (உடுப்பிட்டி அ.மி.கல்லூரி)

**பிரிவு - 3**

சி. கோபிகா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), யோ.லக்சன் ( நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), பி. பிரேம்நாத் (வதிரி திருஇருதயக் கல்லூரி).

**பிரிவு - 4**

க.சிவசுதன் (கரணவாய் மகாவித்தியாலயம்), தி.தினேஷ் (நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), இ.ஐஸ்வரியா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி)

**பிரிவு - 5**

மு.அபிராம் (நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), .க. விபூசுதன் (உடுவில் அ.மி.கல்லூரி), சு.தூயவன் ( தேவரையாளி இந்துக் கல்லூரி)

**கவிதைப் போட்டி**

**பிரிவு - 1**

ச. அருள்ராஜ் ( நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), இ.விதுர்னா (கரணவாய் மகாவித்தியாலயம்), யோ. சயந்தனா (விக்னேஸ்வரா கல்லூரி),

**பிரிவு - 2**

வி.சாளினி (கரணவாய் மகாவித்தியாலயம்), சி. மிதுனா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), பு. பிரியந்தி (விக்னேஸ்வரா கல்லூரி),

**பிரிவு - 3**

சி. அனுசியா ( கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயம்), ச. வித்தகி (விக்னேஸ்வரா கல்லூரி), இ. விநோதினி (வதிரி திருஇருதயக் கல்லூரி),

**பிரிவு - 4**

சி.மேரிஜெனிற்றா (விக்னேஸ்வரா கல்லூரி), பு. ஆர்த்தியா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), பா. கௌரீசன் (நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

## கிளிநொச்சி பொதுச் சந்தையில் அங்காடி வியாபாரத்துக்குத் தடை

**கரைச்சி பிரதேச சபைச் செயலாளர் அறிவிப்பு**

(கிளிநொச்சி)

கிளிநொச்சி டிப்போ சந்தியில் நடைபெற்றுவரும் நடமாடும் வியாபார நடவடிக்கைகள் நாளை புதன்கிழமை முதல் இடம் பெறக் கூடாது என அந்த வியாபாரிகளுக்கு கரைச்சி பிரதேச சபைச் செயலாளரினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் இடம்பெற்றுவரும் நடமாடும் வியாபார நடவடிக்கையினால் அப்பகுதி பொதுமக்களும் பொதுச்சந்தை வியாபாரிகளும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இந்த நிலையில் இது குறித்து பொதுச் சந்தை வர்த்தகர்கள் பிரதேசசபை செயலாளரிடம் விடுத்த கோரிக்கையை அடுத்து செயலாளரினால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், குறித்த திகதிக்கு பின்னர் செயற்படும் நடமாடும் வியாபாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பொதுச்சந்தை வர்த்தகர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் விசேட கூட்டமொன்று நாளை புதன்கிழமை பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக வும், இக் கூட்டத்தில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார், கரைச்சி பிரதேச சபை செயலாளர் உட்பட அரச அதிகாரிகள், வர்த்தகர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (28)

## மீள்குடியமர்ந்த மக்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன

(மாங்குளம்)

கடந்த வெள்ளிக்கிழமை மாங்குளப் பகுதி மக்களுக்கு சைக்கிள்களும், கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

'பவுண்டேசன் ஒவ் யூட்ஸ்நைட்' எனும் நிறுவனத்தால் மாங்குளப் பகுதி மக்களுக்கு 175 சைக்கிள்களும் அப்பகுதியைச்சேர்ந்த மாணவர்களுக்குபாடசாலை கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பை, பாதணிகள் (சப்பாத்து) போன்றவையும் வழங்கப்பட்டதுடன், அப்பகுதி மக்களுக்கு நுளம்புவலை, லாம்பு என்பனவும் வழங்கப்பட்டுள்ளன.

இதில் 'பவுண்டேசன் ஒவ் யூட்ஸ்நைட்' நிறுவனத்தின் பணிப்பாளர், மாங்குள இராணுவப் பிரிகேடியர் கரின் பெரேரா, மாங்குளப்பாடசாலையின் பிரதி அதிபர் சக்திவரதன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (12)



அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்புரைக்கமைய கிழக்கு அரியாலைப்பகுதியில் கட்டாக்காலி மாடுகள் பட்டி அமைத்து பிடிக்கப்பட்டு அப்பகுதி மக்களுக்கு பகிர்ந்தளிக்கும் நிகழ்வு நேற்று இடம் பெற்றது. இந்நிகழ்வில் யாழ். பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் எஸ். சுரேந்திரநாதன் மற்றும் நல்லூர் ஈ.பி.டி.பி. அமைப்பாளர் அ. இரவீந்திரதாஸன் ஆகியோர் பசுமாடுகளை அப்பகுதி மக்களிடம் கையளிப்பதைக் காணலாம். (படம்: பார்த்தீபன்)

## தடுப்பூசி ஏற்றுமாறு அறிவுறுத்தல்

(கரணவாய்)

கரணவாய் கிழக்கு மற்றும் தெற்குக் கிராமங்களில் பொதுச் சுகாதார பரிசோதகர்களினால் வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர்நோய்த் தடுப்பூசியை ஏற்றுமாறு பொதுமக்களுக்கு ஒலிபெருக்கி மூலம் அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த கிராமங்களில் நாய்களை வளர்ப்போர் தடுப்பூசியை தவறாது ஏற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (18)

# புனர்வாழ்வு அபிவிருத்தித் திட்டங்களுக்கென பல மில்லியன் ரூபாவை அரசு ஒதுக்கியுள்ளது

## அமைச்சர் சந்திரசிறி கஜதீர

(யாழ்ப்பாணம்)

நடந்த முடிந்த கொடூர யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் நலன்களில் அக்கறையுடன் செயற்பட்டு வரும் அரசாங்கம் அவர்களின் வாழ்க்கைத் தரமேம்பாட்டுக்காக பல்வேறு கடன் திட்டங்களை அறிமுகப்படுத்திச் செயற்படுத்தி வருகிறது என்று புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற யுத்தப் பாதிப்புக்குள்ளானவர்களுக்கான கடன் வழங்கும் திட்டத்தை ஆரம்பித்து வைத்துப் பேசும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

யுத்தப் பாதிப்புக்குள்ளானவர்களில் நானும் ஒருவன். நான் கலந்து கொண்ட கூட்டமொன்றில் குண்டுவெடித்ததால் எனது ஐந்து மெய்ப் பாதுகாவலர்கள் உயிரிழக்க நேரிட்டது. நான் தெய்வாதீனமாகத் தப்பிக் கொண்டேன். இந்நிலையில் யுத்தத்தின் கொடூரம் எத்தகையது என்பதை நான் நன்கறிவேன்.

கொடிய யுத்தத்தினால் பாதிகப்பட்ட நிலையில், சரணடைந்த புலி உறுப்பினர்களை நாம் பாதுகாப்பாகப் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி, அவர்களது வாழ்வியலுக்கும், பொருளாதார அபிவிருத்திக்குமான பலவிதமான பயிற்சிகளை வழங்கியுள்ளோம்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுடன் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோருடன் இணைந்து வடமாகாணத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டங்களில் பெரும்பாலானவை நிறைவேற்றப்பட்டுள்ளன. இத்திட்டங்களுக்கு பல மில்லியன் ரூபாவை அரசு ஒதுக்கியுள்ளது.

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட புலி உறுப்பினர்களின் பொருளாதார அபிவிருத்திக்கு பத்து வருடங்களுக்குப் பின் மீளச் செலுத்தக்கூடிய வகையில் குறைந்த வட்டியான 4 வீதத்துக்கு இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவினை வழங்குவதற்குத் திட்டமிட்டுள்ளோம்.

மீள்குடியேற்றத்தைப் பொறுத்தமட்டில் யாழ்.மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். இன்னமும் கண்ணிவெடிகள் அகற்றப்படாத பகுதிகளில் அவை அகற்றப்பட்ட பின்னர் அப்பகுதிகளிலும் மக்கள் விரைவில் மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர்.

அடுத்துவரும் நாட்களில் புலி உறுப்பினர்கள் பலர் விடுவிக்கப்படவுள்ளனர். இவர்களுக்கான பயிற்சிகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையைக் குழப்புவதற்கு மேற்குலக நாடுகள் முயன்று வருகின்றன.

இவ்விடயத்தில் நாம் அதிக கவனத்தைச் செலுத்த வேண்டியுள்ளது எனக் கூறிய அமைச்சர், யாழ். மாவட்டம் கூட்டுறவு, விவசாயம் போன்ற துறைகளிலும் அபிவிருத்தி அமைத்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது என்று கூறினார். (05)

# கல்வி நிர்வாக சேவை ஆட்சேர்ப்பு பரீட்சை கொழும்பில் மட்டும்


(யாழ்ப்பாணம்)

கல்வி நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான (SLES) போட்டிப் பரீட்சை இம்முறை கொழும்பில் மட்டுமே நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளதால், வடக்கிலிருந்து விண்ணப்பித்தவர்கள் பல்வேறு சிரமங்களுக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யுத்தம் நடைபெற்ற காலத்தின்போது யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட இப்பரீட்சை இம்முறை கொழும்பில் மட்டுமே நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளதை அடுத்து, யாழ்ப்பாணம், வன்னிப் பிரதேசங்களிலிருந்து விண்ணப்பித்தவர்கள் இப்பரீட்சைக்காக கொழும்பு செல்லவேண்டியுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான அனுமதி அட்டைகள் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இரு வாரங்களுக்கு முன் நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை (SLES) யாழ்ப்பாணத்தில் நடத்தி விட்டு கல்வி நிர்வாக சேவைப் பரீட்சையினை மட்டும் கொழும்பில் ஏன் நடத்துகிறார்கள் என கல்விப் புலத்தினர் கேள்வி எழுப்பியுள்ளனர். (42)



யாழ். வணிகர் கழகத்தால் காரைநகர் பிரதேச செயலகத்தில் நலிவடைந்தோருக்கான கோழி வளர்ப்பு உபகரணங்கள் பயனாளி ஒருவருக்கு வழங்கப்படுவதையும் அருகில் பிரமுகர்கள் நிற்பதையும் காணலாம். (50)

# சிறுபோக நெற்செய்கைக்கு குள நீர் விவசாயிகள் ஆர்வத்துடன் ஈடுபாடு

(யாழ்ப்பாணம்)

வன்னிப் பிரதேசத்தில் சிறுபோக நெற்செய்கைக்காக குளங்களிலிருந்து நீர்ப்பாசனத்துக்காக நீர் விடப்படுவதனை தொடர்ந்து அப்பகுதி விவசாயிகள் சிறுபோக நெற்செய்கையை மேற்கொள்வதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதில் வாய்க்கால்கள் சேதமடைந்துள்ள பகுதி விவசாயிகளுக்கு, ஏனைய பகுதி விவசாயிகள் தமது நிலத்தின் அரைப்பங்கு பகுதியை அவர்களுக்கு வழங்குமாறு விவசாயத் திணைக்களம் கோரியுள்ளது.

இதைவிட விவசாயத் திணைகளம் மற்றும் கமக்கார சங்கங்கள் இச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு வேண்டிய கிருமிநாசினி மற்றும் உர வகைகளையும் வழங்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

குளங்களிலிருந்து கிடைக்கும் நீர்ப்பாசனத்தினைப் பயன்படுத்தி மேட்டு நிலப்பரப் பினை உடைய விவசாயிகள் கச்சான், உழுந்து, பயறு போன்ற சிறுதானியச் செய்கையில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இப்பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு மானிய விலையில் விவசாய சம்மேளனத்தினால் நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்தகைய ஒரு தொகுதி நீர் இறைக்கும் இயந்திரங்கள் கடந்த வாரம் ஒட்டுசுட்டான் விவசாயத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளன. (42)

எங்கட யாழ்ப்பாண ஆசுப்பத்திரிக்க போனா எத்தின பிரச்சனை கிடக்கு? பிரச்சனைகளின் பிறப்பிடம், குதம் இப்பிடி கனக்கச்சொல்லிக்கொண்டு போகலாம்.

பிறகென்ன நாங்களும் அங்கதான பிறக்குறம்! பிரச்சனேன்ர பிறப்பிடமாக அது மாறுகிறதுக்கு நேரமே செல்லும்?

பிரச்சனைகள் எல்லாத்தையும் ஒரேயடியாப் பாக்கேலாது. ஒவ்வொண்டாத் தான் பாக்கவேணும்.

இப்ப உந்த அஞ்சுமாடி வாட்டுகள் கட்டுற வேலையள் துவங்கினப் பிறகு எல்லாமே தலைகீழாக மாறிட்டுது. எங்க தரைவளி போனா மூக்கைப் பிடிச்சா வாயை ஆவெண்ணத் தெரியாதெண்டு சொல்லுவினம்.

அதைப்போல அங்குமிங்கு மிலாந்திப் போட்டு வரவேண்டியது தான். வருத்தத்தைக் காட்டுற இடமும் தெரியாது, வருத்தக் காறரைப் பாக்கிறதும் தெரியாது. ஏனென்டா அவங்கள் தகரவேலிபோட்டு ஆசுப்பத்திரியை ரெண்டா வெல்லே பிரிச்சு வைச்சிருக்கிறாங்கள். முன்பக்கத்தால போன வருத்தத்தைக் காட்ட மட்டும்தான் முடியும்.

அங்கனேக்க ஒன்றிரண்டு வாட்டுகளுக்கு அதால போகலாம். மற்றதெல்லாம் பின்பக்கத்தாலதான் போக வேணும். அதுகும் உந்த வெய்யிலுக்க பதினொண்டரைலே இருந்து பன்னிரெண்டரை மட்டும் வெய்யிலுக்க நிண்டு காயுறதில முதல் வருத்தம் பிடிச்சிடும்.


அதோட மட்டும் முடியுதே வாசல்ல நிக்கிற அந்தக் காவல்காறப் பெடியன் செய்யிற அநியாயம் சொல்லேலாது. அவங்களை மட்டும் குற்றம் சொல்லிப் பிழையில்ல.

இந்தச் சனங்கள் ஒழுங்கா நிக்குதுகளே! ஒருவருக்குப் பின்னால ஒருவரா நிண்டா என்ன குறைஞ்சே போவினம்? பக்கத்தில போய் நிப்பினம். இன்னொருவர் வந்து அவருக்குப் பக்கத்தில நிப்பார்.

மேலும் ஆக்கள் சேரச் சேர இவையளுக்குப் பின்னால நிண்டு இரண்டு மூண்டு கியூ வரிசை முளைச்சிடும். நேரம் நெருங்க நெருங்கப் புதிசா வாறவை வாசலை மறிச்சுக் கொண்டு நிப்பினம்.

இதைப் பாத்திட்டு மற்றவங்கள கியூவில நிப் பாங் களே! அவையளும் போய் வாசலை மூடிக் குமிஞ்சு நிப்பினம். அவன் காவல் நிக்கிற பொடியன் சொல்லிச் சொல்லிக் களைச்சுப் போவான்.

பிறகென்ன கேற்றை திறந்து விட்டோடன ஒரு விநாடி தம்மிட்டு நிக்கும். தடக்கி விழுந்த ஒருவருக்கு மேல ஒருவர் விழுந்து கொண்டந்த வருத்தக்காறருக்கான பொருட்களும் போட்டுச் சிந்துப்பட்டு படுற பாட்டைப் பாக்க வேனுமே! யாழ்ப்பாண ஆசுப்பத்திரி ஒரு பிரளய களம்தான் எண்டால் பிழையே இல்லைக் கேக்கிறன்...



பரமர் சங்கமம்

# உலக புகைத்தல் தினத்தையொட்டி கொடி வேலைத்திட்ட நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

உலக புகைத்தல் நிவாரண தினத்தை முன்னிட்டு சமுர்த்தி அதிகார சபையினால் இன்றுமுதல் எதிர் வரும் யூன் மாதம் 16 ஆம் திகதி வரை கொடி வேலைத்திட்டம் ஒன்றை நடத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த வருடங்களைப் போன்று அந்தந்தப் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் போதை மற்றும் போதைப் பாவனையிலுள்ள ஆபத்துக்களும், சமூகச் சீரழிவுகளும் என்னும் விடயம் தொடர்பாக பொது மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளன.

இவ்வேலைத் திட்டம் போதையிலிருந்து மீட்சி பெறுவோம், வாழ்க்கையினை கட்டியெழுப்புவோம், நாட்டைப் பொலிவூட்டுவோம், உலகினை வெல்வோம் என்னும் தொனிப்பொருளின் கீழ் பிரதேச செயலகங்கள் ஊடாக மேற்கொள்ளப்படவுள்ளது.

இவ்வாண்டுக்கான உத்தேச இலக்கு வருமானமாக 90 மில்லியன் ரூபா எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வருமானம் பிரதேச செயலகங்களின் அதிகார எல்லைக்குட்பட்ட நலன்புரி வேலைத் திட்டங்களுக்கு பயன்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறன.

சமுர்த்தி அதிகார சபையினால் வருடா வருடம் உலக புகைத்தல் நிவாரண தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(31.05.2011 – செவ்வாய்க்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**
கர வருஷம்
வைகாசி 17 ஆம் நாள்.
இராகுகாலம் 2.52–4.22, சுபநேரம் 10.22 –11.52,
நட்சத்திரம் பரணி பி.ப 12.18 வரை
திதி: சதுர்த்தசி பி.இ 2.24 வரை
கரிநாள், கார்த்திகை விரதம்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– பணக் கஷ்டம், குடும்பத்தில் குழப்பம், மனச் சஞ்சலம், அயலவர் பகை, வீண் அலைச்சல்.

ரிஷபம்:– குடும்பத்தில் மகிழ்ச்சி, மன நிம்மதி, தேக சுகம் நலன், நண்பர் வருகை, பயம்.

மிதுனம் :– பணம் வரும், நண்பர் வருகை, மனத்தில் இன்பம், தேகாரோக்கியம், விபத்து வர இடமுண்டு.

கடகம்:– பணக் கஷ்டம், மனக் கவலை, வீட்டில் குழப்பம், அயலவர் தொல்லை, சபலம்.

சிம்மம்:– குடும்பத்தில் குழப்பம், மனச் சஞ்சலம், பணக் கஷ்டம், விபத்து வரலாம், களவு போகலாம்.

கன்னி :– பணம் வரும், குடும்பத்தில் மகிழ்ச்சி, நண்பர் வருகை, அயலவர் நட்பு.

துலாம் :– கடவுள் நம்பிக்கை, பணம் வரும், மன நிம்மதி, வீட்டில் மகிழ்ச்சி, நண்பர் தொல்லை.

விருச்சிகம்:– பணம் வரும், மன மகிழ்ச்சி, குடும்பத்தில் குதூகலம், நண்பர் தொல்லை, சபலம்.

தனுசு:– குடும்பத்தில் நிம்மதி, மனமகிழ்ச்சி, பணம் வரும், அயலவர் பகை, விபத்து வரலாம்.

மகரம்:– மனச் சஞ்சலம், குடும்பத்தில் குழப்பம், வீண் அலைச்சல், நண்பர் பகை, களவுக்கும் இடமுண்டு.

கும்பம் :– பணம் வரும், வீட்டில் நிம்மதி, மன மகிழ்ச்சி, நண்பர் வருகை, அயலவர் நட்பு.

மீனம்:– குடும்பத்தில் குழப்பம், மனச் சஞ்சலம், பணக் கஷ்டம், நண்பர் தொல்லை, கவலை.

# காலிறுதியில் ஜோகோவிச்

கிராண்ட் சிலாம் போட்டிகளில் ஒன்றான பிரேஞ்சு ஓப்பன் ரென்னிஸ் போட்டி பரிஸ் நகரில் நடைபெற்று வருகிறது. உலகின் இரண்டாம் நிலை வீரரான நோவக் ஜோகோவிச் (செர்பியா) 4ஆவது சுற்று ஆட்டத்தில் பிரான்சை சேர்ந்த 13ஆம் நிலை வீரரான ரிச்சர்டை எதிர்கொண்டார். இதில் ஜோகோவிக் 6-4, 6-4, 6-2 என்ற நேர்செட் கணக்கில் எளிதில் வென்று கால் இறுதிக்கு தகுதி பெற்றார்.

ஜோகோவிக் கால்இறுதியில் இத்தாலி வீரர் பேபியோ பாக்னியை எதிர்கொள்கிறார். அவர் 4ஆவது சுற்றில் ஸ்பெயின் வீரர் அல்பர்ட்டை வீழ்த்தினார். 3ஆம் நிலை வீரரான ரோஜர் பெடரர் 3-0 என்ற கணக்கில் வாவர்னிகாவை வீழ்த்தி கால்இறுதிக்கு தகுதி பெற்றார்.

# தலைவர் பதவிக்கான போட்டி விலகினார் மொகமட் ஹம்மாத்

சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் தலைமைப் பதவிக்கான போட்டியில் இருந்து ஆசிய கால்பந்து கூட்டுச் சம்மேளனத் தலைவர் மொஹமட் பின் ஹம்மாத் விலகிக் கொண்டார்.

ஊழல் குற்றச்சாட்டு குறித்து பீபா ஒழுக்காற்றுக்குழுவின் விசாரணைக்கு முகம் கொடுத்ததைத் தொடர்ந்தே 62 வயதான ஹம்மாத் இந்த முடிவை எடுத்துள்ளார்.

சேற்றில் குளித்துக்கொண்டு பீபா தலைவராகத் தேவையில்லை என்று ஹம்மாத் தனது விலகல் குறித்து ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

மொஹம்மட் பின் ஹம்மாதின் விலகலைத் தொடர்ந்து பீபாவின் அடுத்த தலைமை பதவிக்கான போட்டியில் தற்போதைய தலைவர் செப் பிளாட்டர் மாத்திரம் எஞ்சியுள்ளார். பீபாவின் புதிய தலைவரை தேர்வு செய்வதற்கான வாக்கெடுப்பு நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது. இதில் தற்போது போட்டியில் எஞ்சியுள்ள செப் பிளாட்டரும் ஊழல் குற்றச் சாட்டு குறித்து ஒழுங்கு விசாரணைக்கு உள்ளாகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சொந்த நாட்டில் கிடைக்காத கௌரவம் ஐ.பி.எல். போட்டித் தொடரில் கிடைத்தது


ஐ.பி.எல். போட்டியில் கிடைத்த மரியாதையும், ரசிகர்களின் அன்பும் மேற்கிந்தியத் தீவுகளில் கிடைக்கவில்லை என பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் தொடக்க ஆட்டக்காரர் கிறிஸ் கெய்ல் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக தனது டுவிட்டர் பக்கத்தில் அவர் கூறியிருப்பது:

ஐ.பி.எல். போட்டியில் விளையாடிய போது உலகம் முழுவதும் உள்ள ஏராளமான ரசிகர்கள் என் மீது அன்பும், மரியாதையும் காட்டினர். ஆனால் இது ஒருபோதும் மேற்கிந்தியத் தீவுகளில் கிடைத்ததில்லை.

மேற்கிந்தியத் தீவுகளில் இருந்து மூன்று வீரர்கள் கலந்துகொண்டனர். அதில் டரன் பிராவோ மட்டுமே சம்பியன் பட்டம் வென்ற சென்னை அணியில் இடம்பிடித்திருந்தார். கிண்ணத்தை வென்ற அணியில் பிராவோ இடம் பெற்றது மகிழ்ச்சியே என்று கூறியுள்ளார். நான்காவது ஐ.பி.எல். தொடரில் 12 ஆட்டங்களில் விளையாடிய கெய்ல், 2 சதங்களுடன் 608 ஓட்டங்களைக் குவித்து தொடர் நாயகன் விருதைத் தட்டிச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவுடனான ருவென்ரி20 நீக்கப்பட்டார் கிறிஸ் கெய்ல்




இந்தியாவுக்கு எதிராக ருவென்ரி 20, ஒரு நாள் போட்டித் தொடரில் இருந்து மேற்கிந்தியத்தீவுகள் அணி வீரர் கிறிஸ் கெய்ல் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி சமீபத்தில் பாகிஸ்தானுடன் விளையாடியபோது கிறிஸ் கெய்ல் அதைப் புறக்கணித்தார். காயங்களுக்கு சிகிச்சை பெறவுள்ளதாக அவர் அதற்கு காரணம் கூறியிருந்தார். இதனால் அந்த நாட்டின் கிரிக்கெட் சபைக்கும் அவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது.

கிறிஸ் கெய்ல் நன்றாகக் காணப்படுகிறார். மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபைக்குத் தகவல் தெரிவிக்காமல், பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் சார்பில் விளையாட இந்தியாவுக்குச் சென்றுள்ளார் என மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் சபை நிர்வாகம் குற்றம்சாட்டியது.

இந்தநிலையில் இந்திய அணிக்கு எதிரான போட்டிகளில் விளையாடும் வீரர்களின் பட்டியலில் கிறிஸ் கெய்லின் பெயர் இடம்பெறவில்லை.

மேற்கிந்தியத்தீவுகள் அணியின் வீரர்கள் தேர்வின்போது கிறிஸ் கெய்லின் பெயர் பரிசீலிக்கப்படவில்லை என அந்நாட்டின் கிரிக்கெட் சபை வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ருவென்ரி 20 அணி**

சைமன்ஸ், அன்றே பிளட்சர் (விக்கெட் கீப்பர்), டரன் பிராவோ, சாமுவேல்ஸ், டன்சா ஹயாட், டரன் சமி (தலைவர்), கிறிஸ்தோப்பர், பார்வெல், அன்ரூ ரசல், அஸ்லி நேர்ஸ், பிசோ, ராம்போல், கிறிஸ்மார், சன்ரோஜி.

**ஒரு நாள் அணி**

சைமன்ஸ், எட்வேட்ஸ், டரன் பிராவோ, சாமுவோல்ஸ், ராம்நரேஷ் சர்வான், டிவோன் பிராவோ, கிரண் பொலாட், டரன் சமி (தலைவர்), கால்டன் போ (விக்கெட் கீப்பர்), அன்ரூ ரஸல், அந்தோனி மார்ட்பீன், பிசோ, ரவி ராம்போல்.

# எல்லே போட்டியில் சம்பியனானது தெல்லிப்பளை பிரதேச செயலகம்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்தப்பட்ட ஆண்களுக்கான எல்லே போட்டியில் யாழ். மாவட்ட சம்பியனாக தெல்லிப்பளை பிரதேச செயலக அணி தெரிவு செய்யப்பட்டது.

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன், யாழ். மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு இப்போட்டியை நடத்தியது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் நல்லூர் பிரதேச செயலக அணியும் தெல்லிப்பளை பிரதேச செயலக அணியும் மோதிக் கொண்டன.

முதலில் விளையாடிய நல்லூர் பிர தேச செயலக அணி, தெல்லிப்பளை பிரதேச செயலக அணியின் கடுமையான களத்தடுப் பினால் ஓட்டம் எதனையும் பெறாத நிலையில் அனைவரும் ஆட்டமிழந்தனர்.

நல்லூர் பிரதேச செயலக அணி ஓட்டம் எதனையும் பெறாத நிலையில் தெல்லிப்பளை பிரதேச செயலக அணி தனது முதலாது இனிங்ஸ்சில் விளையாடியது. நல்லூர் பிரதேச செயலக அணி பல பிடிகளை விட்ட நிலையில் 14 பேர் ஆட்டமிழந்த நிலையில் 11 ஓட்டங்களைப் பெற்று தெல்லிப்பளை பிரதேச செயலக அணி தனது விளையாட்டை நிறுத்திக்கொண்டது.

இரண்டாவது இனிங்சில் விளையாடிய நல்லூர் பிரதேச செயலக அணி மீண்டும் தெல்லிப்பளை பிரதேச செயலக அணியின் களத்தடுப்பினால் ஓட்டம் எதனையும் பெற முடியாத நிலையில், அனைவரும் ஆட்டமிழந்தனர். தெல்லிப்பளை பிரதேச செயலக அணி 11க்கு 00 என்ற புள்ளிகள் அடிப்படையில் நல்லூர் பிரதேச செயலக அணியை வெற்றி பெற்று யாழ். மாவட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

# தீவக வலய மட்ட மெய்வல்லுநர் போட்டி முடிவுகள்

தீவக வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள் விபரம் கடந்த வெள்ளிக்கிழமை வெளியானது. அதன் தொடர்ச்சி வருமாறு:

**4x100 மீற்றர் அஞ்சலோட்டம்**

சென்.மேரிஸ் ஆர்.சி.மகளிர் வித்தி, வேலணை மத்திய கல்லூரி, டாக்.ஏ.தியாகராசா ம.ம.வி.

**4x400 மீற்றர் அஞ்சலோட்டம்**

டாக்.ஏ.தியாகராச ம.ம.வி, சென்.மேரிஸ் ஆர்.சி மகளிர் கல்லூரி, வேலணை மத்திய கல்லூரி.

**நீளம் பாய்தல்**

ஜி.தனுசியா -சென்.மேரிஸ் ஆர்.சி.மகளிர் வித்தி, ரி.பிரியா - சென்.மேரிஸ் ஆர்.சி. மகளிர் வித்தி, எஸ்.பிரணவி - வேலணை மத்திய கல்லூரி.

**உயரம் பாய்தல்**

வி.மிரோஜா-கரம்பொன் சிறிய புஸ்பம் மகளிர் ம.வி, ரி.பிரியா-சென்.மேரிஸ் ஆர்.சி. மகளிர் வித்தி, வி.தர்மரோஜினி - நெடுந்தீவு ஆர்.சி.மகளிர் கல்லூரி.

**முப்பாய்ச்சல்**

ஆர்.ரெபேக்கா - கரம்பொன் சிறிய புஸ்பம் மகளிர் ம.வி, வி.தர்மரோஜினி - நெடுந்தீவு ஆர்.சி மகளிர் கல்லூரி, பி.குயிலினி - டாக்.ஏ.தியாகராசா ம.ம.வி.

**குண்டெறிதல்**

சி.தர்சிகா - புங்குடுதீவு சிறிசித்தி விநாயகர் வித்தி, எஸ். பிரசாந்தினி - வேலணை மேற்கு நடராசா வித்தி, கே.பாபிகா - அனலைதீவு சதாசிவம் ம.வி.

**தட்டெறிதல்**

எஸ்.பிரசாந்தினி - வேலணை மேற்கு நடராசா வித்தி, எஸ். டிலுக்சி - யாழ்ற்றன் கல்லூரி, கே.பாபிகா - அனலைதீவு சதாசிவம் ம.வி.

**ஈட்டி எறிதல்**

கே.பாபிகா - அனலைதீவு சதாசிவம் ம.வி, எஸ்.பிரசாந்தினி - வேலணை மேற்கு நடராசா வித்தி, வி.ஜோதிகா - சென். மேரிஸ் ஆர்.சி மகளிர் வித்தி.

**19 வயதுக்குட்பட்ட பெண்கள்**

**100 மீற்றர் ஓட்டம்**

எஸ்.மேரிகேமா - சென். அன்ரனீஸ் கல்லூரி, என். அனித்தா - வேலணை மத்திய கல்லூரி, எஸ்.கலீஸ்வரி - நயினாதீவு ம.வி.

(தொடரும்)

# பார்சிலோனாவுக்கு உற்சாக வரவேற்பு

ஐரோப்பிய சம்பியன் லீக் போட்டியில் 4ஆவது முறை சம்பியன் பட்டம் வென்ற பார்சிலோனா வீரர்களுக்கு ஸ்பெயினில் உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

லண்டனில் உள்ள வெம்ளியில் சம்பியன் லீக் கால்பந்து இறுதிப் போட்டி சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த இறுதிப்போட்டியில் ஸ்பெயினின் பார்சிலோனா கழகம் 3-1 கோல் கணக்கில் மான்செஸ்டர் யுனைடெட் அணியை வீழ்த்தி பரிசுக் கோப்பையை வென்றது. ஐரோப்பிய சம்பியன் லீக் போட்டியில் 4ஆவது முறை சம்பியன் பட்டம் வென்ற பார்சிலோனா வீரர்களுக்கு ஸ்பெயினில் உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

பரிசுக்கோப்பை வென்ற வீரர்கள் காடலோனியா தலைநகர் வீதிகளில் அணி வகுத்து வந்தனர். அவர்களை இலட்சக்கணக்கான ரசிகர்கள் திரண்டு வரவேற்றனர். பார்சிலோனா அணி வீரர்கள் லண்டனில் இருந்து நாடு திரும்பியதும் மேல்பகுதி திறந்த பேருந்தில் நின்று வந்தனர். அவர்கள்




நுகெம்ப் ஸ்டேடியத்தில் அணிவகுத்து நின்ற அணியில் சாம்பியன் லீக் இறுதிப்போட்டியில் கோல் அடித்த வீரர்கள் பெட்ரோ, லயோனல் மெஸ்சி, டேவிட் வில்லா ஆகியோர் அறிமுகப்படுத்தப்பட்டனர்.

பின்னர் பரிசுக்கோப்பையை ஆடுகளத்திற்கு அணி நிர்வாகி குவார்டியோலா கொண்டு வந்தார். திரண்டு இருந்த ரசிகர்கள் முன்பாக சர்வதேச கால்பந்து அமைப்பின் இந்த ஆண்டு உலக வீரர் விருது பெற்ற மெஸ்சி உரை நிகழ்த்தினார். பின்னர் மத்திய களவீரர் ஜெரார்டு பிகு பெண் தோழி சாகிரா அளித்த விருந்து நிகழ்ச்சியில் வீரர்கள் பங்கேற்றனர்

### இலங்கை பரிதாபம்

# இங்கிலாந்து இனிங்ஸ் வெற்றி



திரிம்மட், சுவான், போர்ட் ஆகியோரின் துல்லியமான பந்துவீச்சில் இலங்கை அணி இரண்டாவது இனிங்ஸில் 82 ரண்களுக்குள் சுருண்டது. முதலாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 14 ரன்களால் இனிங்ஸ் வெற்றி பெற்று சாதித்தது. முதல் இனிங்ஸில் விளையாடிய இலங்கை அணி 400 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து முதல் இனிங்ஸில் 5 விக்கெட் இழப்புக்கு 496 ஓட்டங்களுடன் ஆட்டத்தை நிறுத்தியது.

இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை 24.4 ஓவர்களில் 82 ரண்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்து இனிங்ஸ் தோல்வியைத் தழுவியது. இவ்வெற்றி மூலம் 1-0 என இங்கிலாந்து முன்னிலை வகிக்கிறது.

# நாட்டுக்காகவா? ஐ.பி.எல்.இலா? தேர்வு செய்யும் உரிமை வீரர்களிடம்

## என்கிறார் கபில்தேவ்

(கொல்கத்தா)

நாட்டுக்காக விளையாடுவதா அல்லது ஐ.பி.எல் போன்ற கழக ஆட்டங்களில் விளையாடுவதா என்பதை தேர்வு செய்யும் உரிமை கிரிக்கெட் வீரர்களுக்கு உள்ளது என முன்னாள் இந்திய அணித் தலைவர் கபில்தேவ் தெரிவித்தார்.

நான் விளையாடிய காலத்தில் நாட்டுக்காக விளையாடுவதையே விரும்பினேன். அதையே செய்தேன். ஆனால் இப்போது காலம் மாறிவிட்டது. வாழ்க்கையும் மாறிவிட்டது. இப்போதைய சூழலில் அடுத்தவர்களின் வாழ்க்கையில் தலையிடமுடியாது. எனவே ஒவ்வொரு வீரர்களும் எதற்காக விளையாட விரும்புகிறார்களோ அதை அனுமதிக்க வேண்டும்.

இப்போது வீரர்கள் அதிக நாட்கள் கிரிக்கெட். விளையாடுகின்றனர். ஒரு கிரிக்கெட் வீரருக்கு எவ்வளவு நாள்கள் ஓய்வு தேவை? என்று கேட்டபோது, இதுபற்றி உண்மையிலேயே எனக்குத் தெரியாது. சிலர் குறைவாக விளையாடுகிறார்கள், சிலர் அதிகமாக விளையாடுகிறார்கள். நான் கிரிக்கெட் விளையாடிய காலத்தில் 4 முதல் 6 மாதங்கள் வரையே விளையாடுவோம். இப்போது 10 மாதங்கள் விளையாடுகிறார்கள். அதனால் இரண்டையும் ஒப்பிடுவது அழகல்ல.

நாளை நடைபெறவுள்ள உலகக் கிண்ணக் கொண்டாட்டத்துக்கு இந்திய கிரிக்கெட் சபை அழைப்பு விடுத்துள்ளது குறித்து மகிழ்ச்சி தெரிவித்த அவர், கிரிக்கெட் சபையுடனான கருத்துவேறுபாடு முடிவுக்கு வந்துவிட்டது. இது உலகக் கிண்ண வெற்றியை கொண்டாடுவதற்கான நேரம். இதற்காக என்னை அழைத்துள்ளது மிகுந்த மகிழ்ச்சியாக உள்ளது.

டோனி தலைமையில் மிகச் சிறப்பாக இந்திய அணி செயற்படுகின்றது. இதையிட்டு நான் மகிழ்ச்சி அடைகின்றேன். என்னைப் பொறுத்து தற்போதுள்ள அணிகளில் இந்திய அணி பலமானதாகவே உள்ளது. இருப்பினும், சகீர்கானுக்கு இணையான ஒரு வேகப்பந்து வீச்சாளர் அணிக்குத் தேவை. அதை உருவாக்க வேண்டிய பொறுப்பு கிரிக்கெட் சபைக்கு உண்டு என்றார்.

# தடகள வீராங்கனை சாதனை




(சிட்னி)

மேற்கு அவுஸ்ரேலியாவில் உள்ள கோட்சிஸ் நகரில் நடந்த தடகளப் போட்டியில் 7 பிரிவு விளையாட்டுக்களைக் கொண்ட ஹெப்தலானில் பிரிட்டிஷ் தடகள வீராங்கனை ஜெசிகா எனிஸ் சாதனை படைத்தார்.

குதிக்கால் காயம் காரணமாக இந்த ஆண்டு ஆரம்பத்தில் 7 வாரம் முழுப் பயிற்சியில் ஈடுபட முடியாமல் ஜெசிகா அவதிப்பட்டார். பாரிசில் நடந்த ஐரோப்பிய இண்டோர் சாம்பியன் ஷிப் போட்டியிலும் அவர் பங்கேற்க முடியவில்லை.

25 வயது ஜெசிகா தமக்கு ஏற்பட்ட குதிக் கால் காயம் முழுமையாக குணம் அடையவில்லை என கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

அவர் கோட்சிஸ் போட்டியில் 6790 புள்ளி எடுத்து வெற்றி பெற்றார். அவரது பிரத்யேக சாதனை அளவைவிட இது 33 புள்ளி குறைவாகும்.

கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்னர் ஜேர்மனியின் பெர்லினில் நடந்த உலக தடகளப் போட்டியில் வென்ற நேரத்தைவிட 59 புள்ளிகள் கூடுதல் ஆகும். காயத்தில் இருந்து மீண்ட ஜெசிகா கோட்சிஸ் போட்டி அதிக முக்கியத்துவம் பெறாத போதும் எதிரணிகளுக்கு புதிய சவால் எழுப்பி உள்ளார்.

நீண்ட இடைவெளியின் பின்னர் நல்ல பெறுபேற்றைப் பெற்றுக் கொண்டதாகவே உணர்கின்றேன்.

இது அடுத்த வருடம் லண்டனில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியிலும் தொடரவே விரும்புகிறேன் என வெற்றிக்குப் பின்னர் ஜெசிகா எனிஸ் தெரிவித்தார்.

# சென் ஜோன்ஸ் த்ரில் வெற்றி

(யாழ்ப்பாணம்)

கண்டி அசார் கல்லூரிக்கெதிரான போட்டியில் த்ரில் வெற்றிபெற்றது சென் ஜோன்ஸ் கல்லூரி அணி.

கண்டி அசார் கல்லூரி, யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி அணிகளின் 17 வயதுப் பிரிவினருக்கான 50 ஓவர்களைக் கொண்ட ஒரு நாள் போட்டி நேற்று சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் முதலில் ஆடிய கண்டி அசார் கல்லூரி அணி 28.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 118 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வசீம் 35, இம்ரான் 25 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் விந்தகரன், சிவலக்ஷன், பிரிந்தவன், சஜந்தன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு வெற்றியிலக்கு நோக்கி ஆடிய சென் ஜோன்ஸ் கல்லூரி அணி, 29.1 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து த்ரில் வெற்றிபெற்றது. இதில் கிருஷ்டிகன் 24, அனோஜன் ஆட்டமிழக்காது 25 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் விக்ரம் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

# சதுரங்கப் போட்டிகளில் வெற்றிபெற்றோர்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பாடசாலைகளுக்கான சதுரங்கச் சங்கம் நடத்திய 7, 9, 11, 13, 15 வயதுப் பிரிவு ஆண், பெண் (தனி) போட்டிகளில் வெற்றியீட்டியோர் விபரம் வெளியாகியுள்ளது.

அதன் விபரம் வருமாறு:

7 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் எஸ். மேனன் (யாழ். பொஸ்கோ வித்தியாலம்) முதலாமிடம், எஸ். திருமால் (யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி) இரண்டாமிடம்.

9 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் ஜே. றிசிகோபன் (யாழ். புற்றளை ம.வி.), முதலாமிடம், கே. சுகன்ராஜ் (யாழ். உடுப்பிட்டி அ.மி.த.க. பாடசாலை) இரண்டாமிடம், எஸ். ஈ. ஜோன்சன் (யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி) மூன்றாமிடம்.

9 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் பி. சாகித்யா (யாழ். வடஇந்து மகளிர் கல்லூரி), முதலாமிடம், ஜே. சர்மினி (யாழ். வட இந்து மகளிர் கல்லூரி) இரண்டாமிடம், ஆர். மாதுமை (யாழ். நெல்லியடி மெதடிஸ்த மிசன் த.க. பாடசாலை) மூன்றாமிடம்.

11 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் பி. சிவபாலஸ்ரீ (யாழ். உடுப்பிட்டி சைவபிரகாச வித்தியாலயம்) முதலாமிடம், எஸ். சுமன் (யாழ். உடுப்பிட்டி சைவபிரகாச வித்தியாலயம்) இரண்டாமிடம், கே. வித்தியாசாகர் (யாழ். மேலை புலோலி சைவபிரகாச வித்தியாலயம்) மூன்றாமிடம்.

11 வயதுப் பிரிவு பெண்கள் எம். துஷாரா (யாழ். மகாஜானக் கல்லூரி) முதலாமிடம், பி. சேதாரணி (யாழ். மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை) இரண்டாமிடம், எஸ். உடையாழ் (யாழ். உடுவில் மகளிர் கல்லூரி) மூன்றாமிடம்.

13 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் எஸ். விதுஜன் (யாழ். பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி) முதலாமிடம், ஏ. அஜஸ்ரீன் (யாழ். இந்துக் கல்லூரி) இரண்டாமிடம், ஆர். டினோஜன் (யாழ். இந்துக் கல்லூரி) மூன்றாமிடம்.

13 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் என். வித்தியா (யாழ். வேம்படி மகளிர் கல்லூரி) முதலாமிடம், பி. சௌந்தர்யா (யாழ். உடுப்பிட்டி மகளிர் கல்லூரி) இரண்டாமிடம், கே. மாதுமை (யாழ். மெதடிஸ்த பெண்கள் கல்லூரி) மூன்றாமிடம்.

15 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் ஏ. மதுஷன் (யாழ். ஹாட்லிக் கல்லூரி) முதலாமிடம், ஜி. செந்தூரன் (யாழ். இந்துக் கல்லூரி) இரண்டாமிடம், எம். பானுஜன் (யாழ். அருணோதயாக் கல்லூரி) மூன்றாமிடம்.

15 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் எஸ். பிரமிளா (யாழ். அருணோதயாக் கல்லூரி) முதலாமிடம், எஸ். புவிதா (யாழ். மெதடிஸ்த பெண்கள் கல்லூரி) இரண்டாமிடம், எஸ். வேதிகா (யாழ். அருணோதயாக் கல்லூரி) மூன்றாமிடம்.

பாடசாலைகளுக்கிடையிலான சதுரங்கப் போட்டி முதல் முறையாக யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட்டமை குறிப்பிடத்கதக்தோடு, இப்போட்டித் தொடரில் ஏராளமான மாணவ, மாணவிகள் பங்குகொண்டு தமது திறமைகளை வெளிப்படுத்தியிருந்தனர். (கா)

# பல்கலையில் கல்விபயிலும் பிள்ளைகளின் எதிர்காலம்; பெற்றோர்கள் கவலைப்படத்தேவையில்லை

## என்கிறார் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.



(கொழும்பு)

பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் தமது பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து எந்தவொரு பெற்றோரும் இனி கவலைப்பட வேண்டியதில்லை. புதிதாக பல்கலைக்கு வருபவர்கள் மீது பகிடி வதைச் செயற்பாடுகளை மேற்கொள்ள இடமளிக்கப்படமாட்டாது என உயர் கல்வி அமைச்சர் எஸ். பி. திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

பகிடி வதையில் ஈடுபடுவோரின் பிரதான நோக்கம் புதிய மாணவர்களின் தன்நம்பிக்கை மற்றும் தனிப்பட்ட குணத்தை இல்லாமற்செய்வதாகும். இலங்கை இளைஞர்களில் திறமை வாய்ந்தவர்களே அரசாங்க பல்கலைக் கழகங்களுக்குள் நுழைகின்றனர். ஒவ்வொரு பட்டதாரிக்கும் அரசு வருடாந்தம் $2^{1/2}$ இலட்ச ரூபாவை செலவிடுகிறது. அதேபோல் ஒவ்வொரு பிக்கு மாணவனுக்கும் 3 இலட்சம் ரூபா செலவிடப்படுகிறது. இவ்வாறு நாட்டின் எதிர்காலத் தலைவர்களை உருவாக்க அரசாங்கம் பல கோடி ரூபாவைச் செலவிடுகிறது.

இவ்வாறான செயற்பாட்டை பகிடி வதையில் ஈடுபடுவோர் பின்னோக்கிக் கொண்டு செல்கின்றனர். அதற்கு இடமளிக்கப்படமாட்டாது. பல்கலைக்கழக கல்வி முறையை சர்வதேச தரத்துக்கு முன்னெடுத்துச் செல்வதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என்று அமைச்சர் திஸாநாயக்க மேலும் குறிப்பிட்டார்.

# இலங்கையின் இறைமைக்கு எதிராக வெளிநாட்டுச் சக்திகள் செயற்படுகின்றன

## அமைச்சர் பசில் தெரிவிப்பு



(கண்டி)

இலங்கையின் இறைமைக்கு எதிராக வெளிநாட்டுச் சக்திகள் செயற்பட்டு வருவதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்ட குற்றச்சாட்டை தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கையின் இறைமைக்கு எதிராக செயற்படும் வெளிநாட்டுச் சக்திகளும்,சில குழுக்களும்,இலங்கைக்குள் ஊடுருவி நாட்டின் இறைமையைச் சீர்குலைக்க முயற்சிகள்ள மேற்கொண்டுவருகின்றன.

ஐ.நாவின் மனித உரிமைப் பேரவை அமர்வுகள் இடம்பெற்றுவரும் நிலையில், இந்த முயற்சிகளை அந்த நாடுகள் மேற்கொண்டுவருவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

# வன்னியின் ஸ்திரத்தன்மையை சீர்குலைக்க ஜே.வி.பி. முயல்வதாக குற்றச்சாட்டு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் குழப்பங்களை ஏற்படுத்துவதற்கு ஜே.வி.பி. முயற்சித்து வருவதாக அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது. குறிப்பாக வன்னியின் ஸ்திரத்தன்மைக்கு குந்தகம் ஏற்படுத்தும் வகையிலான செயல்களை ஜே.வி.பி. மேற்கொண்டு வருவதாக சிரேஷ்ட அரசாங்க அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

2010ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் ஜே.வி.பி. அடைந்த தோல்வியை மூடிமறைக்கும் நோக்கில் இவ்வாறு வன்னியில் குழப்பங்களை ஏற்படுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலும், வன்னியிலும் ஜே.வி.பியினர் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். எனினும்,அரசாங்கம் பயங்கரவாதத்தை இல்லாதொழித்திருக்கா விட்டால் ஒரு சுவரொட்டியைக்கூட வன்னியில் ஒட்டியிருக்க முடியாது என்பதனை துரதிர்ஷ்டவசமாக மறந்து செயற்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

புலிகளின் குடும்பங்களைப் பயன்படுத்தி தமது பிரசாரங்களை முன்னெடுக்க ஜே.வி.பி. முயற்சித்து வருகின்றது. எனினும், ஜே.வி.பியின் இந்த பொறியில் வடக்கு - கிழக்கு மக்கள் சிக்க மாட்டார்கள்.


அரசாங்கத்தை விமர்சனம் செய்யும் தரப்பினர் யதார்த்தத்தை புரிந்து கொள்ளாமல் செயற்படுகின்றனர். புலிகள் தோற்கடிக்கப்படா்விட்டால் ஜே.வி.பியோ அல்லது தமிழ்த்தேசியக் கூட்டமைப்போ சுதந்திரமாக அரசியலில் ஈடுபட்டிருக்க முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# நாட்டை இராணுவ மயமாக்கும் முயற்சியில் அரசின் செயற்பாடுகள் அமைந்துள்ளன

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

(கொழும்பு)

**அரசாங்கத்தின் அண்மைக்காலச் செயற்பாடுகள் அனைத்தும் நாட்டை இராணுவ மயமாக்கும் நடவடிக்கைகளாகவே அமைந்துள்ளன. பல்கலைக்கழக மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சி வழங்கப்படுவதுடன், பாடசாலை அதிபர்களுக்கும் இந்தப் பயிற்சி வழங்கப்படவுள்ளது. அரசாங்கத்தின் இத்தகைய செயற்பாடுகள் பெரும் சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளன என்று ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.**



அரசாங்கத்தின் அண்மைக்காலச் செயற்பாடுகள் குறித்து அவர் மேலும் கூறியதாவது, அரசாங்கத்தின் சர்வாதிகாரச் செயற்பாடுகளுக்கு இடையூறாக இருப்பவர்களை பழிவாங்குவதும் தமக்கு தேவையானவற்றை நிறைவேற்றிக்கொள்வதற்கு சூட்சுமமாக நடவடிக்கை எடுப்பதும் அரசாங்கத்தின் செயற்பாடாக மாறியுள்ளது.

அரச திணைக்களங்கள் பலவற்றின் உயர் பதவிகளுக்கு இராணுவ அதிகாரிகளை அரசாங்கம் நியமித்து வருகின்றது. பல்கலைக்கழகங்களில் நிவர்த்தி செய்யப்படாத எவ்வளவோ குறைபாடுகள் இருக்கின்றபோதிலும், எவ்வித அறிவித்தல்களோ, கலந்துரையாடல்களோ இன்றி இராணுவத் தலைமைத்துவப் பயிற்சியினை பல்கலைக்கழக மாணவர்களுக்கு அரசாங்கம் வழங்குகின்றது. இந்த இராணுவத் தலைமைத்துவப் பயிற்சி குறித்து புத்திஜீவிகளுடனோ அல்லது நாடாளுமன்றத்திலோ விவாதிக்கப்படவில்லை. குறைந்தபட்சம் பல்கலைக்கழக மாணவர்களின் அனுமதியைக்கூட பெறவில்லை.

அரசாங்கம் எதற்காக இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்கின்றது என்பதே தற்போதைய கேள்வியாகவுள்ளது. தலைவர்களும், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளும் அரசாங்கத்திடம் கேள்விமேல் கேள்வியெழுப்பியபோதிலும், அதற்கான உரிய பதிலை அரசாங்கம் தெரிவிக்கவில்லை.

இவ்வாறு தனது சர்வாதிகாரச் செயற்பாடுகளைப் படிப்படியாக அரங்கேற்றி வந்த அரசாங்கம், தற்போது பாடசாலை அதிபர்களுக்கும் இராணுவத் தலைமைத்துவப் பயிற்சியினை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. பாடசாலை அதிபர்களுக்கு பாடசாலை முகாமைத்துவ பயிற்சி நெறிகள் உட்பட பல்வேறு நிர்வாக பயிற்சி நெறிகள் நடைமுறையில் இருக்கின்றன. இந்தநிலையில் அரசாங்கம் இவர்களுக்கு இராணுவத் தலைமைத்துவப் பயிற்சியை வழங்குவதற்கு முயற்சிக்கின்றது. அரசாங்கத்தின் இவ்வாறான செயற்பாடுகள் நாட்டை இராணுவமயப்படுத்த எடுக்கப்படும் நடவடிக்கைகளாகவே கருதவேண்டியுள்ளது. எனவே அரசாங்கத்தின் இத்தகைய செயற்பாடுகளை தடுப்பதற்கு அனைவரும் ஓரணியில் திரள வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

# சுவிஸ் அரசியல் தஞ்சம் கோரிய தமிழர்களை திருப்பி அனுப்புவதற்கு எதிராக கலந்துரையாடல்



(சுவிஸ்)

சுவிஸ் நாட்டில் அகதித் தஞ்சம் கோரிய தமிழ் மக்களைத் திருப்பி அனுப்பும் நடவடிக்கைக்கு எதிராக, அச்சுறுத்தலுக்கு இலக்கான மக்களுக்கான அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடல் அண்மையில் பேர்ண் மாநகரில் நடைபெற்றது.

சுவிஸ் நாட்டின் திருப்பியனுப்பும் நடவடிக்கை இலங்கையில் மனித உரிமைகளைப் பாதிக்குமா? எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் லுற்சேர்ண் மாநில நாடாளுமன்ற உறுப்பினர் லதன் சுந்தரலிங்கம், 'பல்மைரா' தொண்டு நிறுவன இலங்கை இணைப்பாளரும் உளவள ஆலோசகருமான தயா தியாகராஜா, சுவிஸ் மத்திய குடிவரவுத் திணைக்களத்தின் அகதிகளைத் திருப்பி அனுப்புவதற்கான மத்திய நிலையத் தலைமை அதிகாரி பிலிப் ஹாஸ், அச்சுறுத்தலுக்கு இலக்கான மக்களுக்கான அமைப்பின் தலைவர் கிறிஸ் வீட்மர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ள போதிலும், தமிழ் மக்களுக்கு முறையான அரசியல் தீர்வொன்று வழங்கப்பட்டிராத நிலையில், தமிழ் மக்களைத் திருப்பி அனுப்பும் சுவிஸ் அரசாங்கத்தின் முடிவானது பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும் என்று இக்கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஜனவரி மாதம் சுவிஸ் அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட முடிவின்படி சுமார் 2,000பேர் வரையிலான தமிழர்கள் உடனடியாகத் திருப்பி அனுப்பப்படும் வாய்ப்பு உள்ளதாகத் தெரிவித்த குடிவரவுத் திணைக்கள அதிகாரி மாதமொன்றுக்கு சுமார் 100 தமிழர்கள் வரை தற்போதும் அகதித் தஞ்சம் கோரி வருவதாகத் தெரிவித்தார்.

அதேவேளை, திருப்பி அனுப்பப்படும் யாவரும் சுய விருப்பின் பேரிலேயே அனுப்பப்படுவார்கள் எனவும் திருப்பி அனுப்பப்படும் முடிவிற்கு எதிராகத் தமது நிலைப்பாட்டைத் தெரிவிக்க கால அவகாசம் வழங்கப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

# வீதி விபத்தில் ஒன்பது பேர் காயம்

(வவுனியா)

வவுனியாவில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் ஆறு இராணுவத்தினர் உட்பட 9 பேர் காயமடைந்துள்ளனர்.

கொழும்பு - யாழ்ப்பாணம் சேவையில் ஈடுபட்டிருந்த தனியார் பேருந்தில் பயணம் செய்த வேளை குறித்த பேருந்து பாதையிலிருந்து விலகி தடம் புரண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்துச் சம்பவம் ஓமந்தைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

# இறுதிக்கட்டப் போரின் அனுபவங்கள்; படை அதிகாரிகளிடம் வாக்கு மூலம் பதிவு

(கொழும்பு)

புலிகளுக்கு எதிராக நடத்தப்பட்ட போர் பற்றிய அறிக்கை ஒன்றைத் தயாரித்து வரும், இராணுவத் தளபதிகளால் நியமிக்கப்பட்ட உயர் நிலைக்குழு, தற்போது முக்கிய இராணுவ அதிகாரிகளிடம் வாக்கு மூலங்களைப் பதிவு செய்து வருகிறது.

இராணுவத்தின் இந்த அறிக்கை, மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை அரசாங்கம் முறியடிப்பதற்கு பயனுள்ளதாக இருக்கும் என்று இறுதிக் கட்டப்போரில் பங்கேற்ற முக்கிய இராணுவ அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இராணுவத் தளபதியால் நியமிக்கப்பட்ட உயர்மட்டப் படைத் தளபதிகளை உள்ளடக்கிய இந்தக்குழு, அறிக்கை தயாரிப்பில் மும்முரமாக ஈடுபட்டுள்ளது.

இந்த அறிக்கை போர் முனையில் பணியாற்றிய இராணுவ அதிகாரிகளின் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும்.

அத்துடன் புலிகளின் பிடியில் இருந்து பொதுமக்களை மீட்கும் நடவடிக்கைகள் பற்றிய விடங்களையும் அது உள்ளடக்கியிருக்கும்.

51, 53, 55, 57, 58, 59 ஆவது டிவிசன்கள் மற்றும் அவற்றுக்குத் துணையாகச் செயற்பட்ட சிறப்புப் படைப்பிரிவின் அணிகள், கொமாண்டோ உபகுழுக்கள், சிறப்பு அதிரடிப்படை ஆகியவற்றினது போர்முனைத் தளபதிகள், மற்றும் கட்டளை அதிகாரிகளிடமும் வாக்குமூலங்கள் பதிவு செய்யவுள்ளதாக உயர் இராணுவ அதிகாரிகள் கூறியுள்ளனர்.

அதேவேளை, இராணுவத் தளபதியால் நியமிக்கப்பட்ட இந்தக் குழு, வன்னியில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள பல இராணுவ அதிகாரிகளிடம் வாக்கு மூலங்களைப் பதிவு செய்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# மேலைத்தேய நாடக மன்றத்தின் வருடாந்தப் பரிசளிப்பு விழா



(யாழ்ப்பாணம்)

இராஜ குலேந்திரனின் நினைவாக சுண்டுக்குளியில் இயங்கும் மேலைத்தேய இசைப் பேச்சு மற்றும் நாடகவியல் மன்றத்தின் வருடாந்தப் பரிசளிப்பு விழா கடந்த 17ஆம் திகதி யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிப் பிரிவு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ஷிராணி மில்ஸ் பிரதம அதிதியாகவும், மன்றத்தின் போசகர் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் இடம்பெற்ற மாணவர்களின் இசை நிகழ்ச்சிகளும் ஆங்கில உரைகளும் பார்வையாளர்களைக் கவர்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதைவிட, அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட போட்டியில் குறித்த மன்றத்தின் பயிற்சி பெற்ற 85 மாணவர்கள் பேச்சுப் போட்டியிலும், 15 மாணவர்கள் மேலைத்தேய இசையிலும் முதலாமிடத்தைப் பெற்று வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக் கொணடனர். இதில் பேச்சுப் பயிற்சிக்கு திருமதி எஸ்.கதிர்காமரும், இசைப் பயிற்சிக்கு திருமதி எஸ்.வி. ஜெபநேசனும் பொறுப்பாசிரியர்களாகக் கடமையாற்றியிருந்தனர்.

இதேவேளை குறித்த மன்றம் கொழும்பில் இயங்கும் மேலைத்தேய இசைப் பேச்சு நாடகம் என்ற நிறுவனத்தால் நடத்தப்படும் பரீட்சைகளுக்கு மாணவர்களைத் தயார்படுத்தி பயிற்சி அளித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (20)

# நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ள இலங்கையின் பொருளாதாரம்

(கொழும்பு)

இலங்கைப் பொருளாதாரம் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

தூர நோக்கற்ற கொள்கைகள் மற்றும் அரசியல் தலையீடு காரணமாக நாட்டுக்கு பொருத்தமான பொருளாதாரக் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதிகளுக்கும், சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதிக்கும் இடையில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது. அந்த சந்திப்பின் போது இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமைகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் ரவி கருணாநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

யுத்தம் முடிவுறுத்தப்பட்டுள்ள போதிலும் பொருளாதார ரீதியில் பாரிய சவால்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. சர்வதேச நாணய நிதியத்தின் வதிவிடப் பிரதிநிதி கோஷி மாத்தியுடன் மீண்டும் ஒரு சந்திப்பு நடத்தப்பட உள்ளதாகவும் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

வெளிப்படைத் தன்மையற்ற வகையில் அரச நிறுவனங்களை அரசாங்கம் தனியார்மயப்படுத்தி வருவதாகவும் நாட்டின் முக்கிய துறைகளில் அரசியல் தலையீடு காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். முதலீட்டுக் கொள்கைகளை அமுல்படுத்தும் போதும் ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறைகள் பின்பற்றப்படுவதில்லை எனவும் குற்றம சுமத்தியுள்ளார்.

# அரச ஊழியர்களுக்கான ஆக்கத்திறன் போட்டிகள்

(பருத்தித்துறை)

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு ஆண்டுதோறும நடத்தும் அரச ஊழியர்களுக்கு இடையிலான ஆக்கத்திறன் போட்டியினை இவ்வாண்டும் நிகழ்த்துவற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அரச மற்றும் அரசுடன் இணைநத நிறுவனங்களில் சேவையில் ஈடுபட்டிருக்கும் படைப்பாளர்களுக்கு இலக்கியக் கலை தொடர்பாக ஊக்கமளிக்கவும் மற்றும் அவர்களின் கலை ஆற்றல்களை வெளிப்படுத்தும் முகமாக இப்போட்டி வருடநதோறும் நடத்தப்பட்டு வருகின்றது.

சிறுகதை, சிறுவராக்கம், பாடலாக்கம், கவிதையாக்கம், குறு நாடகம், ஓவியம் தொடர்பான ஆககங்கள் இப்போட்டிக்கு அரச ஊழியர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன. தமிழ், சிங்கள மொழிகள் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

சிறுகதை 1500 சொற்களுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும். பாடலாக்கம் மூன்றரை நிமிடங்களினுள் பாடக்கூடிய பாடலுக்குப் பொருத்தமான சொல்லமைப்பாக இருத்தல் வேண்டும். கவிதையாக்கம் ஆகக்கூடியது பத்துச் செய்யுள் பகுதிகளுக்குக் கட்டுப்படுதல் வேணடும். சிறுவராக்கம் சிறுவர் கதைப் புத்தகமொன்றை படங்களுடன் பத்து வயதுக்குக் குறைந்த பிள்ளைகளுக்குப் பொருத்தமான நம்பிக்கையுடன் கூடிய எண்ணங்களால் சிறுவர் மனதை மலர்விக்கும் வகையிலான உட்கருவுடன் எளிதான மொழி நடையில் பதினாறு பக்கங்களுக்கு மேற்பட்டதாகப் படைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

குறுநாடகம் ஆகக்கூடியது நாற்பத்தைந்து நிமிட காலவரையிலானதாகக் கொண்டிருத்தல் வேண்டும். கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் மேடையேற்றத்தக்க வகையில் எமது நாட்டுக் கலாசாரத்திற்கு தாக்கங்கள் எதுவும் ஏற்படாத படைப்பாக இருத்தல் வேண்டும். ஓவியம் "கலாசார ஒற்றுமை" எனும் தலைப்பின் கீழ் விரும்பிய மேற்பரப்பில் விரும்பியதை உபயோகித்து 18x14 பரிமாணத்தில் வரையலாம்.

ஆக்கங்கள் அனைத்தையும் ஜூலை 30ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கக் கூடியதாக செயலாளர், கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு, 8ஆம் மாடி, செத்திரிபாய, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (109)

# அடிப்படைக் கற்கை நிறுவனம் நடத்தும் ஆசிரிய, மாணவரிடையே ஆக்கப் போட்டிகள்

(பருத்தித்துறை)


பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கிடையே பிரதியாக்கம், கேலிச்சித்திரம், சுவரொட்டி, ஒலி, ஒளி வடிவங்களில் அமைந்த ஆக்கப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

"நனோ தொழில்நுட்பத்தினூடாக புதுயுகம்" என்ற தொனிப்பொருளில் அடிப்படைக் கற்கைளுக்கான நிறுவனம் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கிடையே இப்போட்டியினை நடத்தவுள்ளது. பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்களிடையே நனோ விஞ்ஞானத்தில் ஆர்வத்தை ஏற்படுத்தும் முகமாகவே இப்போட்டி நடத்தப்படவுள்ளது.

மாணவர்களுக்கிடையிலான போட்டிகள் இருபிரிவுகளாக நடத்தப்படவுள்ளன. தரம் 9,10,11 வகுப்புக்களில் கற்கும் மாணவர்கள் பிரிவு ஒன்று போட்டியிலும், தரம் 12,13 வகுப்புக்களில் கற்கும் மாணவர்கள் பிரிவு இரண்டு போட்டியிலும் பங்குபற்ற முடியும். இரண்டு பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கும் கதை, நாடகப் பிரதியாக்கம், கேலிச்சித்திரம், சுவரொட்டி, ஒலி, ஒளி வடிவமைந்த ஆக்கங்கள் ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

மிகச்சிறந்த ஆக்கங்களுக்கு முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களும், பாராட்டத்தக்க ஆக்கங்களுக்கு ஐந்து இடங்களுக்கும் வழங்கப்படவுள்ளது. ஆக்கங்கள் அனைத்தையும் ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் கலாநிதி குமாரி திலகரட்ண, இணைப்பதிகாரி, விஞ்ஞான செயற்றிட்டப் பிரிவு, அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவனம், வரந்தனை வீதி, கண்டி எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (109)

# லஞ்ச, ஊழல் ஆணைக்குழுவிற்கு இரண்டாயிரம் முறைப்பாடுகள்



(கொழும்பு)

லஞ்ச மற்றும் ஊழல் ஆணைக்குழு இயங்கத் தொடங்கியுள்ள நிலையில், லஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பாக இரண்டாயிரம் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவரும், ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதியுமான ஜகத் பாலபட்ட பெண்டி தெரிவிததார். ஏற்கனவே கிடைக்கப்பெறற ஆயிரம் முறைப்பாடுகள் தொடர்பாக ஆணைக்குழு விசாரித்து வரும் நிலையில், தற்போது இரண்டாயிரம் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இவ்வாறு கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளில் பெரும்பாலானவை அரச பணியாளர்கள், அரசியல்வாதிகள், பொலிஸார் மற்றும் பலருக்கு எதிரானவையாக உள்ளன.

இவ்வாறு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளும் போதிய சான்றுகளைக் கொண்டிருக்கவில்லை. முறைப்பாடுகள் தொடர்பான சரியான தகவல்கள் கிடைக்காமல் தம்மால் விசாரணைகளை நடத்த முடியாதெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பெரியகுளம் அரசினர் பாடசாலை வீதி கசால பெரேரா மாவத்தையாகியது




(கொழும்பு)

புலிகளுடனான யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில் வடக்கில் புதிதாக பௌத்த விகாரைகளை அமைக்கும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

ஏற்கனவே வடபகுதியில் புதிய பல விகாரைகள் அமைக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது கனகராயன்குளம்-பெரியகுளம் பகுதியிலும் மற்றொரு பாரிய பௌத்த விகாரையை அமைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

விகாரைக்கான தூபியை அமைப்பதற்கு மண் குவிக்கப்பட்டு வருவதுடன், அப்பகுதி முள்ளுக் கம்பி வேலியிடப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளது. அதேவேளை பெரியகுளம் அரசினர் பாடசாலை வீதியை, கசால பெரேரா மாவத்தை என்று சிங்களத்தில் பெயர் மாற்றம் செய்யப்பட்டு சீமெந்து நடுகல் ஒன்றும் நாட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# அரியாலையில் பிடிபட்ட கட்டாக்காலி பசுக்கள் அப்பகுதி மக்களுக்கு வழங்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

அரியாலை கிழக்கில் பிடிக்கப்பட்ட ஒருதொகுதி கட்டாக்காலி பசு மாடுகள் நேற்றுக் காலை அப்பகுதி மக்களுக்கே பிரித்து வழங்கப்பட்டுள்ளன. அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்பிற்கமைய அரியாலை-கிழக்குப் பகுதியில் கட்டாக்காலிகளாக காணப்பட்ட மாடுகள் பட்டி அமைத்து, அப்பகுதி கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் பிடிக்கப்பட்டிருந்தது.

முதற்கட்டமாக இவ்வாறு பிடிக்கப்பட்ட சுமார் 60 வரையான கட்டாக்காலி மாடுகளில் பசுமாடுகள் அப்பகுதி மக்களுக்கு நேற்று வழங்கப்பட்டன. அவற்றில் காளை மாடுகள் ஏலத்தில் விடப்படவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

நேற்றுக்காலை அரியாலை கிழக்குப் பகுதியில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலக திட்டப் பணிப்பாளர் எஸ்.சுரேந்திரநாதன், நல்லூர் பிரதேச ஈ.பி.டி.பி அமைப்பாளர் அ.இரவீந்திரதாசன் மற்றும் அப்பகுதி கிராமசேவகர், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர். இதன்போது ஒவ்வொரு குடும்பத்தவரும் தலா ஆயிரம் ரூபா செலுத்தி பசு மாடுகளைப் பெற்றுக்கொண்டனர். இப்பணம் பசுமாடுகளை அவர்கள் தொடர்ந்து நல்லமுறையில் பராமரித்து வருமிடத்து, அவர்களுக்கே அப்பணம் திருப்பி வழங்கப்படும். அத்துடன் வழங்கப்பட்ட பசுமாடுகள் உழவு இயந்திரத்தில் ஏற்றப்பட்டு அந்தந்தப் பயனாளிகளின் வீட்டிற்கு கொண்டு செல்ல கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இவ்வாறு வரும் நாட்களிலும் பிடிக்கப்படும் பசுமாடுகள் அப்பகுதி மக்களுக்கு வழங்கப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது. (பா)

# ஊழியர் சேமலாப, நம்பிக்கை நிதிய சட்ட மூலங்களைத் திருத்த அரசு முடிவு

(கொழும்பு)

உத்தேச ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக தொழிற்சங்கங்கள் கடும் ஆட்சேபனையைத் தெரிவித்து வரும் நிலையில், ஊழியர் சேமலாப நிதியம் (ஈ.பி.எவ்.) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் (ஈ.ரி.எவ்.) ஆகியவற்றுக்கான சட்டமூலங்களைத் திருத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.


ஊழியர் சேமலாப நிதிய, ஊழியர் நம்பிக்கை நிதிய சட்டமூலங்கள் திருத்தப்படவுள்ளதாக திறைசேரிச் செயலாளர் கலாநிதி பி.பி.ஜயசுந்தர கூறியுள்ளார்.

தனியார் துறைக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கான திட்டத்திற்கான ஏற்பாடுகளை மேற்கொளவதற்காகவே இச் சட்டமூலங்கள் திருத்தப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நிதியமைச்சானது தற்போது உத்தேச ஓய்வூதியத்திட்டம் மற்றும் ஊழியர் சேமலாப நிதிய, ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டங்களின் திருத்தம் என்பவற்றுக்கு ஏற்பாடுகளை மேற்கொண டுள்ளது.

ஓய்வூதியச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு உதவியாகவே இவற்றைத் திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்தத் திருத்தங்களுக்கு தொழிற்சங்கங்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன. இந்த இரு நிதியங்களில் இருந்தும் பணத்தை எடுத்துக் கொள்ள அரசாங்கம் முயற்சிப்பதாக அவை சாடியுள்ளன.

அதேவேளை, உத்தேச தனியார் ஓய்வூதியத் திட்டம் குறித்து பொதுமக்கள் மத்தியில் தெரியப்படுத்துவதற்காக கையேடு ஒன்றை



வழங்கவுள்ளதாக நிதித்திட்ட அமுலாக்கல் அமைச்சு கூறியுள்ளது.

# பிரதேச சபை உப அலுவலகம் ஓமந்தையில் திறக்கப்படுகிறது

(வவுனியா)

வவுனியா தெற்கு, தமிழ்ப் பிரிவு பிரதேச சபையின் ஓமந்தை உபஅலுவலகம் மற்றும் அங்கு ஏற்கெனவே கட்டப்பட்ட இறைச்சி, மீன்கடைகளும் எதிர்வரும் 8 ஆம் திகதி பிரதேச சபைத் தலைவரினால் வைபவரீதியாகத் திறந்துவைக்கப்படுமென பிரதேச சபை அலுவலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

வரி செலுத்துபவர்களுடைய நலன் கருதி உபஅலுவலகத்தைத் திறக்க முடிவு செய்யப்பட்டது. மேலும் நீண்டகாலமாக கட்டிமுடிக்கப்பட்டுத் திறக்கப்படாதுள்ள கடைகளைத் திறப்பதன் மூலம் சபைக்கு வருமானம் கிடைக்குமென சபை உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

பிரதேச சபைக்கு மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களூடாகப் பல்வேறுபட்ட வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. வேலைத்திட்டங்களுக்கு த்னித்தனி குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.


# கிளிநொச்சி மாவட்டத்தில் 50 வீதிகள் புனரமைப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் சேதமடைந்து போக்குவரத்துக்கு தடையாகவுள்ள பிரதான வீதிகளைத் துரிதகதியில் புனரமைக்கும் நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இதற்கான ஆரம்ப நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி, நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஆகியோர் கலந்துகொண்டு வீதிப்புனரமைப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 50 வீதிகள் துரித வீதிப் புனரமைப்புத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இவற்றைப் புனரமைப்புச் செய்யும் பணியில் படையினரும், உள்ளூராட்சித் திணைக்களமும் கூட்



டாகச் செயற்படுகின்றன. இதன் போது கிளிநொச்சியிலிருந்து வட்டக்கச்சியூடாக இராமநாதபுரம் செல்லும் பிரதான வீதி புனரமைப்புப்பணி, குறித்ததினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், வடமாகாண உள்ளூராட்சிமன்றங்கள் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் திருமதி விஜயலட்சுமி, கிளிநொச்சி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் உதயராஜ, கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரிப் பிரதேச சபைகளின் செயலாளர்கள், பொதுமக்களெனப் பலரும் கலந்துகொண்டனர்.

# வாரத்தில் ஒரு நாள் மாத்திரம் மாணவர்களுக்கு கண்சிகிச்சை

(வவுனியா)

வவுனியா மாவட்ட அரசினர் பொதுவைத்தியசாலையில் திங்கட்கிழமை, புதன்கிழமை ஆகிய இரு தினங்களில் பொதுமக்களுக்கான கண்சிகிச்சை நடைபெற்று வருகின்றன.

பாடசாலை மாணவர்களுக்கு ஒவ்வொரு சனிக்கிழமையும் இநதச் சிகிச்சை இடம்பெற்று வருவதாக வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

அண்மையில் மூன்று நாளில் 350 பேருக்கு கண்ணில் வில்லை வைக்கும் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டதென வைத்தியசாலை அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் நோயாளர்களும் கண்சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலையையே நாடுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பஞ்சாப் யுவதிமீது அசிட் வீசுமாறு உத்தரவிட்ட இலங்கைப் பெண்

(கொழும்பு)

இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்திலுள்ள கபுர்தலா மாவட்டத்தில் யுவதியொவரின் மீது திராவகம் (அசிட்) வீசுவதற்கு பிரான்ஸில் வசிக்கும் இலங்கைப் பெண்ணொருவர் உத்தரவிட்டதாகப் பஞ்சாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஜனவரி 10 ஆம் திகதி நடைபெற்ற இச்சம்பவம் தொடர்பாக 3 நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளதாக "டைம்ஸ் ஒவ் இந்தியா" தெரிவித்துள்ளது.

கமல்ஜித் சிங் என்பவரின் மனைவியான இலங்கைப் பெண்ணே இக்குற்றச் செயலுக்கு உத்தரவிட்டதாகவும் துபாயில் வசிக்கும் ஜஸ்ப்ரீத் சிங் என்பவர் மேற்படி யுவதி மீது திராவகம் வீசியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பிரான்ஸில் வசிக்கும் இலங்கைப் பெண்ணின் கணவர் என்ற வகையில் பிரான்ஸில் வசிப்பதற்கு கமல்ஜித் சிங் உரிமை பெற்றார். எனினும் இந்த அனுமதி கிடைத்தவுடன் கமல்ஜித் சிங் தன்னிடமிருந்து விலகி சொந்த ஊரிலுள்ள காதலியை திருமணம் செய்வதற்கு முற்படுவதாக கமல்ஜித் சிங்கின் மனைவி அறிந்ததால், மேற்படி யுவதி மீது திராவகம் வீசுவதற்கு ஜஸ்ப்ரீத் சிங்கை கோரியதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆஷிஸ் சௌத்திரி தெரிவித்துள்ளார்.

துபாயைச் சேர்ந்த ஜஸ்ப்ரீத் இதற்காக இந்தியாவுக்குத் திரும்பி வைத்தியசாலையொன்றில் பணியாற்றும் அந்த யுவதி மீது ஏனைய இரு இளைஞர்களுடன் சேர்ந்து திராவகத்தை வீசியுள்ளனர். இதனால் அந்த யுவதியின் முகத்திலும் தலையிலும் எரிகாயங்கள் ஏற்பட்டுள்ளன.

இதையடுத்துக் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் பொலிஸாரிடம் மேற்படி இலங்கைப் பெண் குறித்து கூறியுள்ளனர். தனக்கு ஒரு லட்சம் ரூபாவும் ஏனைய இரு இளைஞர்களுக்கும் 30 ஆயிரம் ரூபாவும் தருவதுடன் தன்னை பிரான்ஸுக்கு வரவழைப்பதாக இலங்கைப் பெண் உறுதியளித்தார் என ஜஸ்ப்ரித் தெரிவித்துள்ளார்.

# குருநகர் சேமக்காலைப் பகுதியில் அடிக்கடி தடைப்படும் மின்சாரம்

(யாழ்ப்பாணம்)

குருநகர் சேமக்காலைப் பகுதியில் அடிக்கடி மின்சாரம் தடைப்படுவதால் அப்பகுதியில் வாழும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

முன்னறிவித்தல் இன்றி அடிககடி தடைப்படும் மின்சாரத்தினால் அத்தியாவசிய பாவனை பெரும் இடையூறாக உள்ளதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தொடர்ச்சியாக ஒரு மாதமாக சனி மற்றும் ஞாயிறு தினங்களில் முன்னறிவித்தல் கொடுக்காது காலை 9 மணியிலிருந்து பிற்பகல் 6 மணி வரை மின்சாரம தடைப்படுகின்றன.


அத்துடன் இரவு வேளைகளிலும் மின்சாரம் தடைப்படுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

நாளாந்தம் தண்ணீர்ப் பாவனை மற்றும் இயந்திரப் பாவனையில் உள்ளவர்களுக்கு பெரும் சிக்கலைத் தருவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

பத்திரிகைகளில் வேறு இடஙகளில் மின்சாரம் தடைப்படும் என்று அறிவித்தல் விடுக்கப்பட்டு தங்கள் பகுதிகளில் மின்சாரம் தடைப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

சேமக்காலையை அண்டிய பகுதிகளான றெக்கிளமேசன் கிழக்கு, றெக்கிளமேசன் தெற்கு மற்றும் தொடர்மாடிப் பகுதிகளிலேயே இப்படி அடிக்கடி மின்சாரம் தடைப்படுவதாகவும் தொிவிக்கப்படுகிறது. (21)





**திருகோணமலை, நிலாவெளி கடற்பகுதியில் அமைந்துள்ள புறாமலை தேசிய பூங்காவை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கடந்த சனிக்கிழமை திறந்துவைத்தார்.**

**இந்நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, வனஜீவராசிகள் அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன மற்றும் நீரியல் மீன்பிடித்துறை பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே உட்படப் பலர் கலந்துகொண்டனர்.**

# மன அழுத்தத்தைப் போக்க



மனஅழுத்தம்,படபடப்பைப் போக்கும் ஒரு 'ஸ்பிரே'யை அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்த 'ஸ்பிரே'யை இலேசாக மூக்கருகே பீய்ச்சி, வாசத்தை நுகர்ந்தால் போதும், இரண்டு மணிநேரத்தில் மனம் அமைதியாகி விடும் என்கிறார்கள்.

இந்த 'ஸ்பிரே'யில் உள்ள இயற்கையான வேதிப் பொருள், மன நிலையைக் கட்டுப்படுத்தும். மூளைப் பகுதிக்கு ஊடுருவி, 'மாயம்' புரியும் என்று கூறுகிறார்கள்.

மனஅழுத்தத்தைப் போக்க ஏற்கனவே சில மருந்துகள் இருக்கின்றன. ஆனால் அவை பலன் தர சில நாட்கள் ஆகும். அவற்றுடன் ஒப்பிடும்போது 'ஸ்பிரே' உடனடியானது என்கிறார்கள் இதை உருவாக்கியிருக்கும் ஆராய்ச்சியாளர்கள்.

நியூயோர்க்கில் உள்ள மவுண்ட் சினாய் மருத்துவக் கல்வி நிலையத்தில் தற்போது சோதனை முறையில் இந்த வேதிப்பொருள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. நடத்தை, மனநிலையைக் கட்டுப் படுத்துவதில் மூளையில் காணப்படும் 'நியூரோபெப்டைடு ஒய்' உள்ளிட்ட வேதிப்பொருட்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

# மெழுகுச் சிலைகள்



லண்டன் மற்றும் பாரிஸில் தான் இந்த மெழுகுச்சிலை அருங்காட்சியகம் உள்ளது என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். மகாராஷ்டிரா மாநிலத்தில் இந்திய கிராம வாழ்க்கையை பிரதிபலிக்கும் சிற்பங்கள் மிகவும் அழகாக தத்ரூபமாக இங்கு வடிவமைக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

# நேரத்தை நினைவுபடுத்த



வாழ்க்கையில் சின்ன சின்ன விஷயங்களை ஞாபமாக மறந்து விடுவோம். தண்ணீர் மோட்டர் போட்டால் இதனை நிறுத்துவதற்கு மறந்து விடுவோம். பாலை அடுப்பில் வைத்து மறந்து விடுவோம். அரை மணி நேரம் கழித்து எனக்கு போன் செய் என்று யாராவது சொன்னால் அதனையும் மறந்து விடுவோம்.

இந்த எல்லா வேலைகளையும் இணையத்தில் - கணினியில் பணி செய்கையில் அழிக்கழ நடக்கும். நேரம் காலம் போவது தெரியாமல் கணினியிலே மூழ்கிவிடுவோம். இனி அந்த கவலை வேண்டாம்.

நமக்கு நமக்கு தேவையான நேரத்தை நினைவுபடுத்த இந்தச் சின்ன மென்பொருள் உதவுகின்றது. 1எம்.பி.கொள்ளளவு கொண்ட இதனை பதிவிறக்கம் செய்ய http:.:. www.4shared.com/file/vrHMyzhn/tea.html? இந்தத்தளம் உதவுகின்றது. இதில் தேவையான நேரத்தை குறித்து வைத்து கழகாரத்தை ஓட விடுங்கள். குறிப்பிட்ட நேரம் ஆகியதும் உங்களுக்கு அலாரத்துடன் இந்தச் செய்தி கிடைக்கும். நேரத்திற்கு தேநர் குழக்க என்று இந்த மென்பொருளில் வழவமைத்துள்ளார்கள். நாம் தண்ணீர் மோட்டர் நிறுத்த - பாலை அடுப்பில் இருந்து இறக்க - போன்செய்ய- என எதற்கு வேண்டுமானாலும் இந்த மென்பொருளை பயன்படுத்திக்கொள்ளலாம். நீங்களும் பயன்படுத்திப்பாருங்கள்.

# தமிழ் மொழியில் சீன இளைஞன்



பொதுவாக பல ஆண்கள் பெண்கள் குரல் எடுத்து பேசும் திறமையுடையவர்கள். பேச்சு மட்டுமின்றி பெண்கள் குரலில் பாடி அசத்தும் பல ஆண்களை நாம் பார்த்து ரசித்திருக்கிறோம். ஆனால் இந்த இளைஞனைப் பாருங்கள் நீங்கள் இதுவரையில் ரசித்த அவ்வாறான ஆண் பெண் குரலில் பாடும் திறமையை விட சற்று தனித்துவமானவன் இவன். இதில் என்ன தனித்துவம் என்றுதானே கேட்கிறீர்கள் ஆம் ஒரு சீன இளைஞன் எமது தமிழ்ப் பாடலை பிழை இன்றி மிகவும் நேர்த்தியாகப் பாடியுள்ளார். அதுவும் தென்னிந்திய பெண்பாடகர்களில் தனி இடத்தை பிடித்துள்ள ஜானகி அம்மாவின் குரலினைப்போன்று பாடியுள்ளார் இவர்.

# தூங்கு கண்ணா தூங்கு



இரவு நேரங்களில் போதிய அளவு தூங்காத சிறுவர்களின் உடல்பருமனடைகின்றது என்று ஆய்வொன்றின் மூலம் தெரிய வந்துள்ளது.

3 வயது முதல் 7 வயது வரை உள்ள 244 குழந்தைகளிடம் நடத்தப்பட்ட ஆய்வில் இந்தத் தகவல் தெரியவந்துள்ளது.

பி.எம்.ஜே இணையத தளத்தில் இந்த ஆய்வு அறிக்கை வெளியிடப்பட்டு உள்ளது. இரவு நேரத்தில் உரிய அளவு தூக்கம் இல்லாத சிறுவர்களுக்கு உடல் பருமன் அதிகரிப்பதுடன, இதர உடல் நலக்கோளாறுகளும் ஏற்படுகின்றன. ஆய்வின் போது 3 - 5 வயது காலகட்டத்தில் 6 மாதத்திற்கு ஒரு முறை ஆய்வுக்குத் தேர்வு செய்யப்பட்ட சிறுவர்களின் உடல் எடை, உயரம், உடல் கொழுப்பு விவரம் கணக்கிடப்பட்டன. அதே போன்று சிறுவர்களின் தூக்க விவரம் மற்றும் உடல் செயறபாடு ஆகியவையும் பதிவு செய்யப்பட்டன.

சாப்பிடுவதற்கு கூடுதல் நேரம் எடுத்துக் கொள்ளுதல் மற்றும் ஹோர்மோன் மாற்றம் காரணமாக பசி நிலையிலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. உடல் எடையைக் குறைக்க விரும்பும் சிறுவர்கள் இரவில் நன்றாகத் தூங்க வேண்டும் என ஆய்வினை மேற்கொண்ட வார்விக் பல்கலைக்கழக பேராசிரியர்கள் பிரான் செஸ்கோ காபுசியோ மற்றும் மிச்லே மில்லர் தெரிவித்துள்ளனர்.

5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் இரவில் 11 மணி நேரம் தூங்க வேண்டும் என பீடியாட்ரிக்ஸ் மற்றும் குழந்தைகள் மருத்துவத்திற்கான றொயல் கல்லூரி மருத்துவர் மாகோனோசி அறிவுறுத்தி உள்ளார்.

தூக்கக் குறைபாடு காரணமாக ஞாபகமறதி, நடத்தை மாற்றம், பள்ளி செல்வதில் குறைபாடு போன்றவை ஏற்படுகின்றன.

# பதில் தரும் இணையம்



ஒருவர் கேட்கும் கேள்விகளுக்கு பதில் அளிப்பது எளிதான காரியம் இல்லை என்றாலும், கூகுள் போன்ற தளங்கள் பதில் அளித்துக் கொண்டு தான் இருக்கின்றன.

ஆனால் ஒரு தளம் கேள்விகளுக்குப் பதிலை நேரடியாக தன்னுடைய தளத்திலே அளிக்கிறது. கணக்கு அளவீடு முதல் உள்ளூர் தகவல் வரை கணினி மூலம் செயற்கைக்கோள் வரை அனைத்து கேள்விகளுக்கும் ஒரே இடத்தில் இருந்து பதில் அளிக்கிறது. கணக்குச் செய்ய வேண்டும் என்றால் ஒரு தளம், மேப் பார்ப்பதற்கு மற்றொரு தளம், அறிவியல் தகவல் அறிந்து கொள்ள மற்றும் ஒரு தளம், மருத்துவத் தகவல்களை அறிந்து கொள்ள வேண்டும் என்றால் மற்றும் ஒரு தளம்.


இப்படி ஒவ்வொரு தளமாக சென்றுதான் இதுவரை நாம் தகவல்களை அறிந்து கொண்டிருந்தோம். இனி ஒரே தளத்தில் இருந்து அத்தனைக்கும் பதில் கொடுப்பதற்காக ஒரு தளம் உருவாக்கப்பட்டுள்ளது. http:-www.wolframalpha.com/ இந்த தளத்திற்கு சென்று கட்டத்திற்குள் ஒரு கணக்கு கொடுத்தால் உடனடியாக அதற்கான விடையும், ஒரு நாட்டைப்பற்றி கேட்டால் அந்த நாட்டின் மக்கள் தொகை என்ன எந்த மொழி பேசுபவர்கள் அதிகமாக வசிக்கின்றனர் என்பதையும், செயற்கைகோள் பற்றி கேட்டால் அதற்கான புள்ளி விபரங்களுடனும் தகவல்களை கொடுக்கின்றது.

ஒரு மருந்தைப் பற்றி கேட்டால் அதற்கான முழுவிபரமும், குறிப்பிட்டை ஊரைப்பற்றி கேட்டால் அந்த ஊரின் செயற்கை கோள் படமும், பிரபலமானவர்களைப் பற்றி கேட்டால் அவர்கள் படம், பிறந்த இடம் மற்றும் பல தகவல்கள் இப்படி பல சேவைகளை சத்தமே இல்லாமல் செய்கிறது இத்தளம்.

கணினி மூலை

# இலங்கையிலுள்ள தமிழர்கள் தொடர்பாக இந்திய ஆட்சியாளர் கவலைப்படுவதில்லை

## இந்திய கம்யூனிஸ்ட் தலைவர் நல்லகண்ணு வேதனை



(புதுடில்லி)

இந்திய ஆட்சியாளர்கள் ஈழத் தமிழர்கள் குறித்து கவலைப்படுவதில்லை என்றும், ஈழத் தமிழர்கள் பிரச்சினையில் ஐ.நா. அறிக்கை குறித்து மத்திய அரசு உறுதியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் கட்டுப்பாட்டுக் குழுத் தலைவர் ஆர்.நல்லகண்ணு பேசினார்.

ஈழத் தமிழர்களுக்கும், தமிழ்நாட்டில் உள்ள தாய்த் தமிழர்களுக்கும் பல்வேறு பிணைப்புகள் உண்டு. இந்தியாவுக்குப் பிறகு சுதந்திரம் பெற்ற இலங்கை தொடக்கத்தில் இருந்தே அங்குள்ள ஈழத் தமிழர்களை அழிப்பதில் முனைப்புக் காட்டி வருகிறது. அவர்களுக்கான உரிமைகளை மறுத்ததோடு அவர்களை அழிக்கவும் செய்து வருகிறது.

இலங்கையில் நடைபெற்ற போர் குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை வெளியாகியுள்ள இந்தச் சமயத்தில், கடந்த காலங்க ளில் தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் ஈழத் தமிழர்களுக்காக என்ன செய்தன என்பதை திரும்பிப் பார்க்க வேண்டும்.

தமிழர்களுக்குச் சொந்தமான கச்சத்தீவை இலங்கைக்கு கொடுத்ததால், இன்றளவும் தமிழக மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர். இலங்கை அரசு நடத்திய சூதாட்டத்தில் தமிழர்கள் பலியாகி விட்டார்கள். இந்திய ஆட்சியாளர்கள் ஈழத் தமிழர்களைப் பற்றி கவலைப்படுவதில்லை.

ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை குறித்து மத்திய அரசு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ் மக்கள் இணைந்து நின்று குரல் கொடுத்து கொடுங்கோல் ஆட்சியை தனிமைப்படுத்தி ஈழத தமிழர்களுக்கு வாழ்வு கிடைக்க வழி ஏற்படுத்த வேண்டும் என்றார்.

# மம்தாவின் திடீர் பயணங்களால் அதிர்ச்சியடைந்துள்ள பொலிஸார்

(புதுடில்லி)

மேற்கு வங்காளத்தில் முதல் அமைச்சராக பொறுப்பேற்றுள்ள மம்தா பானர்ஜி, முன்னறிவிப்பு இல்லாமல் பல்வேறு இடங்களுக்கு திடீர் ஆய்வுக்கு செல்வதால் பொலிஸார் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

மேற்கு வங்காளத்தில் முதல் பெண் முதல் அமைச்சராக கடந்த 20 ஆம் திகதி மம்தா பானர்ஜி பதவியேற்றார். பதவியேற்றதும் ஆளுநர் மாளிகையில் இருந்து தலைமைச்செயலகத்துக்கு நடந்தே சென்று முதல் அமைச்சர் அலுவலகத்தில் பொறுப்பேற்றார்.

இசட் பிளஸ் பாதுகாப்பில் இருக்கும் முதல் அமைச்சர் மம்தா பானர்ஜிக்கு குண்டு துளைக்காத கார் மற்றும் அவருடைய பயணத்தின்போது முன்அறிவிப்பு செய்ய பைலட் கார் போன்றவை அளிக்கப்பட்டன. ஆனால், குண்டு துளைக்காத கார் மற்றும் பைலட கார் ஆகியவற்றை திருப்பி அனுப்பிவிட்டார்.

மேலும், வீதியில் செல்லும்போது போக்குவரத்தை நிறுத்தி தனக்காக கூடுதல் ஏற்பாடுகள் எதையும் செய்ய வேண்டாம் என்றும் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். சாதாரண மக்களைப் போலவே போக்குவரத்து சிக்னலை மதித்து தனது காரும் சிக்னலில் நின்று செல்லும் என உறுதியாகத் தெரிவித்து விட்டார். அதுவும், கட்சியினர் அளித்த காரிலேயே இப்போதும் பயணம் செய்கிறார்.



எம்.எல்.ஏ வாக 12 ஆவது முறையாகவும் நேற்றைய தினம் சத்தியப்பிரமாணம் செய்த தி.மு.க. தலைவர் கருணாநிதி தமிழக சட்டமன்ற சபாநாயகர் ஜெயக்குமாருக்கு கைலாகு கொடுப்பதனைக் காணலாம்.

இந்தியச் செய்திகள்

# அ.தி.மு.க.வின் சாதனைகளை விளக்கி ம.தி.மு.க ஒட்டிய சுவரொட்டியால் பரபரப்பு




(சென்னை)

தமிழகத்தில் அ.தி.மு.க அரசு பொறுப்பேற்று இரண்டுவார காலம் ஆன நிலையில், தூத்துக்குடி மாவட்டம் முழுவதும் அ.தி.மு.க அரசின் சா(சோ)தனைகள் என்ற பெயரில் ம.தி.மு.க.வினர் சுவரொட்டிகள் ஒட்டியுள்ளனர். இந்த சுவரொட்டி விவகாரம் தூத்துக்குடியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அந்த சுவரொட்டியில், சட்டசபை இடமாற்றம் ரூபாய் 1100 கோடி நஷ்டம், சமச்சீர் கல்வித் திட்டம் ரத்து ரூபாய் 500 கோடி இழப்பு, ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர் வீட்டில் கொள்ளை சட்டம், ஒழுங்கு-சந்தி சிரிப்பு

சட்ட, மேல்-சபை முடக்கம் சர்வாதிகார ஆட்சியின் துவககம், இவ்வாறு வாசகங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய ம.தி.மு.க மாவட்ட செயலாளர் ஜோயல், மீண்டும் ஆட்சிக்கு வந்ததும், அ.தி.மு.க. வின்சர்வாதிகாரப் போக்கு தொடங்கியுள்ளது.

ஆட்சி பொறுப்பேற்று ஒருவார காலத்திற்குள்ளாகவே, ஒரு சர்வாதிகார ஆட்சி தான் கொடுப்பேன் என்று சொல்லக் கூடிய அளவிற்கு சட்டசபை இடமாற்றம், சமச்சீர் கல்வி ரத்து என்று ஆயிரம் கோடி ரூபாவான மக்களின் வரிப் பணத்தை இன்றைக்கு பாழாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இதனை மக்களுக்கு தெரிவிக்கும் வகையில் சுவரொட்டிகள் ஒட்டியுள்ளோம் என்றார்.


# கொமன்வெல்த் போட்டி ஊழல் சுரேஷ் கல்மாடிதான் காரணம்

## போட்டிக்கான அமைப்பு அறிக்கை

(புதுடில்லி)

கொமன்வெல்த் விளையாட்டு போட்டியில் நடந்த ஊழலுக்கு சுரேஷ் கல்மாடிதான் முழுபொறுப்பும் காரணமுமாகும் என்று மத்திய விளையாட்டுத் துறை அமைச்சகத்திற்கு கொமன் வெல்த் விளையாட்டுப் போட்டிக்கான அமைப்பு குழு பதில் அனுப்பி உள்ளது. டில்லியில் கடந்த ஒக்டோபர் மாதம் நடைபெற்ற கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டியை நடத்தியதில் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் அளவுக்கு ஊழல் நடந்துள்ளது.


இந்த ஊழல் எந்த அளவுக்கு நடந்துள்ளது என்பது குறித்து ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க சுங்குலு குழுவை கடந்த அக்டோபர் மாதம் 25 ஆம் திகதி மத்திய அரசு நியமித்தது. இந்த குழுவை கொமன் வெல்த் விளையாட்டு போட்டியில் நடந்துள்ள ஊழல் குறித்து விரிவான முறையில் ஆய்வு செய்து ஆதாரங்களை திரட்டி அறிக்கையை மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளது.



அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டுகள் குறித்து பதில் அளிக்கும்படி கொமன்வெல்த் விளையாட்டு போட்டி அமைப்பு குழுவை மத்திய விளையாட்டுத்துறை அமைச்சகம் கேட்டுக்கொண்டது. அதன்படி அமைப்பு கமிட்டியானது பதில் அளித்துள்ளது.

அதில் விளையாட்டுப் போட்டியில் ஊழல் நடப்பதற்கு முழுபொறுப்பு சுரேஷ் கல்மாடி தான் என்று தெளிவாக கூறியுள்ளது. விளையாட்டு போட்டியை பார்க்க டிக்கெட் கொடுத்தல், அதன் விலையை நிர்ணயம் செய்தல், கூடுதலாக பட்ஜெட் தயாரித்தல், ஆலோசகர்களை நியமித்தல், பணிக்கு ஆட்களை நியமித்தல் ஆகியவைகளில் நடந்த ஊழலுக்கு சுரேஷ் கல்மாடிதான் காரணமாகும் என்று கொமன்வெல்த் விளையாட்டு அமைப்பு கமிட்டியானது தனது 1000 பக்க அறிக்கையில் கூறியுள்ளது. சுரேஷ் கல்மாடி ஏற்கனவே கைது செய்யப்பட்டு திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். மேலும் காங்கிரஸ் கட்சியில் இருந்தும் நீக்கப்பட்டுள்ளார்.

# ஜெயலலிதாவின் ஆட்சி அமைவதற்கு அணிலாக இருந்தாராம் நடிகர் விஜய்



(சென்னை)

ஜெயலலிதா ஆட்சி அமைய அணிலாக இருந்த காரணத்தை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன் என்று நடிகர் விஜய் பேசினார்.

சென்னையில் உள்ள சங்கீதா கல்யாண மண்டபத்தில் நேற்றுமுன்தினம் மாலை நடிகர் விஜய், தனது மக்கள் இயக்க நிர்வாகிகளை திடீரெனச் சந்தித்தார். நிகழ்ச்சிக்கு மக்கள் இயக்க நிறுவுனர் எஸ்.ஏ.சந்திரசேகரர் தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய நடிகர் விஜய்,

நமது இயக்கம் அதி.மு.க. தலைமையிலான கூட்டணிக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று உங்கள் அனைவரையும் கேட்டுக் கொண்டேன்.

நீங்கள் பல்வேறு அரசியல் கட்சிகளில் இருந்தாலும், அந்த உணர்வுகளை எல்லாம் தூக்கி எறிந்துவிட்டு, என் சொல்லுக்கு கட்டுப்பட்டு ஜெயலலிதாவின் வெற்றிக்கு முழு மூச்சோடு உழைத்த உங்கள் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜெயலலிதாவின் பொற்கால ஆட்சி அமைய, நாமும் ஓர் அணிலாக இருந்த காரணத்தை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன்.

மேலும் வெற்றி பெற்ற பல வேட்பாளர்கள் என்னைத் தொடர்பு கொண்டு, உங்களது கடுமையான உழைப்பை பாராட்டிய போது எனக்குப் பெருமையாக இருந்தது.


மாற்றம் என்பது மானிடத் தத்துவம் என்று கவியரசு கண்ணதாசன் சொன்னது போல, நமது நற்பணி மன்றங்கள் காலப்போக்கில் நற்பணி இயக்கமாக மாறியது. இலங்கைத் தமிழர்களுக்காக உண்ணாவிரதம் இருந்தது முதல், ஏழை

மாணவ, மாணவிகளுக்கு கனிணி மையங்கள் ஏற்படுத்தியது வரை, பல சமூக நலப்பணிகள் செய்து நமது இயககம் மக்கள் இயக்கமாக மாறியது.

இனி மேலும் சமூக நலப்பணியைத் தொடர்ந்து செய்து, முதல் அமைச்சர் ஜெயலலிதாவின் கரத்தை வலுப்படுத்தி, ஜெயலலிதாவின் ஆசியோடு உங்களின் எதிர்காலத்தையும் ஒளிமயமாக்கிக் கொள்ள வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். விவேகானந்தர் சொன்னது போல வேகத்தோடும், விவேகத்தோடும் பணியாற்றுங்கள். நாளைய உலகம் உங்கள் கையில். இவ்வாறு நடிகர் விஜய் பேசினார்.

# மிகப்பெரிய ஊழல் குற்றச்சாட்டை எதிர்நோக்கவுள்ள ஜனாதிபதி ஒபாமா

—— பிரபல அரசியல் விஞ்ஞானி கணிப்பு



(லண்டன்)

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா விரைவில் மிகப்பெரிய ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளாவார் என்று பேராசிரியரும் அரசியல் விஞ்ஞானியுமான பிரேந்தன் நிஹெறன் என்பவர் கணித்துக் கூறியுள்ளார். மிஸ்சின் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக பிரெந்தன் நிஹெறன் பணியாற்றி வருகிறார். கணக்கு விதி முறைகளின் படி இவர் ஒரு கணிப்புச் செய்து அதை அரசியல் மையம் என்ற இணையத்தளத்தில் வெளியிட்டுள்ளார். அந்த கணிப்பில் அதிபர் ஒபாமா விரைவில் ஒரு மிகப்பெரிய ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளாவார் என்று குறிப்பிட்டுள்ளார். அதனால் ஒபாமாவின் நிர்வாகத்திற்கு ஒரு பெரும் அதிர்ச்சியாக இருக்கும் என்றும் அவர் கூறியுள்ளார். அமெரிக்காவின் கறுப்பு இனத்தைச் சேர்ந்த முதல் அதிபர் ஒபாமா மீது இந்த ஊழல் குற்றச்சாட்டானது அமெரிக்க அதிபர் தேர்தல் நடப்பதற்கு முன்பு வெளியாகலாம். அதாவது அடுத்தாண்டு ஜுன் மாதத்திற்குள் இந்த மிகப்பெரிய ஊழல் குற்றச்சாட்டு வெளியாகுவதற்கு 90 முதல் 95 சதவீதம் வரை வாய்ப்பு உள்ளது என்றும் டெய்லி மெயில் என்ற பத்திரிகையில் செய்தி வெளியாகி உள்ளது. அமெரிக்காவில் ஜனாதிபதித் தேர்தல் அடுத்த வருடம் நடைபெற உள்ளது.

# பாலியல் குற்றச்சாட்டு தொடர்பாக பிரான்ஸ் அமைச்சர் பதவி விலகினார்

(பாரிஸ்)

மாநகராட்சி அலுவலகத்தில் பணியாற்றும் இரண்டு பெண் ஊழியர்களை பாலியல் ரீதியாக பலாத்காரம் செய்தார் எனத் தெரிவித்து எழுந்துள்ள சர்ச்சையை அடுத்து பிரான்ஸ் அமைச்சர் ஒருவர் தனது பதவியிலிருந்து விலகியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இவர் மீது நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. அந்த வழக்கு தற்போது விசாரணைக்கு வந்துள்ளது. எனவே அவர் தனது அமைச்சர் பதவியை ராஜினாமாச் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து ஜார்ஜ்ஸ் டிரான தனது அமைச்சர் பதவியை ராஜினாமாச் செய்தார். இதுதொடர்பான கடிதத்தை பிரதமர் நிகோலஸ் சர்கோஷிக்கு அனுப்பி வைத்தார்.

அதில், நான் குற்றமற்றவன். என் மீது சுமத்தப்பட்டுள்ள பாலியல் குற்றச்சாட்டு ஆதாரமற்றது. மோசடியில் ஈடுபட்டதற்காக ஒரு பெண் ஊழியரையும், தகாத நடத்தையில் ஈடுபட்டதற்காக மற்றொரு ஊழியரையும் பணியில் இருந்து நீக்கினேன். அதற்குப் பழிவாங்கும் நடவடிக்கையாக என் மீது அவர்கள் பாலியல் குற்றச்சாட்டைச் சுமத்தியுள்ளனர். நான் குற்றமற்றவன் என்பதை நிரூபிக்கவே பதவியை ராஜினாமா செய்து இருக்கிறேன் என்று கூறியுள்ளார்.

# ஆப்கானின் வடக்கு மாகாணத்திலுள்ள ஆளுநர் மாளிகை மீது தாக்குதல்

பொலிஸ் தளபதி உட்பட 7 பேர் பலி

(காபூல்)

ஆப்கானின் வடக்கு மாகாணத்திலுள்ள ஆளுநர் மாளிகை மீது தலிபான் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் பொலிஸ் கொமாண்டர் உட்பட ஏழு பேர் பலியானதுடன் பலர் காயமடைந்தனர். இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:

ஆப்கானிஸ்தானில் உள்ள தாக்கர் வடக்கு மாகாணத்தில் உள்ள கவர்னர் மாளிகையில் நேற்று அதிகாரிகள் கூட்டம் நடந்தது. அதில், ஆப்கானிஸ்தான் மற்றும் பன்னாட்டு படைகளை சேர்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர். அப்போது பலத்த பாதுகாப்பையும் மீறி உள்ளே நுழைந்த தற்கொலைத் தீவிரவாதி தனது உடலில் கட்டியிருந்த குண்டை வெடிக்க செய்தான்.

இதில், பொலிஸ் கெமாண்டர் ஜெனரல் மொகமத் தவூத் மற்றும் பொலிஸ் தலைமை அதிகாரி ஜகனநூரி மற்றும் 2 ஜெர்மனி இராணுவ வீரர்கள் உள்பட 7 பேர் பலியாகினர். இவர்கள் தவிர தாக்கர் மாகாண கவர்னர் அப்துல் ஜாபர் தக்வா, ஜெர்மனியைச் சேர்ந்த இராணுவ கெமாண்டர் மார்க்ஸ் நெய்ப் உட்பட பலர் காயம் அடைந்தனர். இத் தாக்குதலுக்கு தலிபான் தீவிரவா திகள் பொறுப்பேற்றுள்ளனர். பொலிஸ் சீருடை அணிந்தபடி வந்த தீவிரவாதிகள் இத்தாக்குதலில் ஈடுபட்டது தெரியவந்துள்ளது.



# ஏமன் அரசியல் நெருக்கடியைப் பயன்படுத்தி தலைநகரைக் கைப்பற்றிய அல்கொய்தா?

(சனா)

ஏமனில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியைப் பயன்படுத்தி தென்பகுதி மாகாணம் ஒன்றின் தலைநகரை அல்கொய்தா பயங்கரவாதிகள் கைப்பற்றி விட்டனர்.

இந்நிலையில் அரச படைகள் மற்றும் எதிர்க் கட்சி ஆதரவாளர்களுக்கிடையிலான சண்டை முன்னறிவிப்பு எதுவுமின்றி திடீரென நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

ஏமனில் அதிபர் அலி அப்துல்லா சலே பதவி விலக மூன்றாவது முறையாக மறுத்ததை அடுத்து, அங்கு பிரதான பழங்குடியினமான ஹஷித் ஆதரவாளர்களுக்கும், அதிபரின் படைகளுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது.

கடந்த ஐந்து நாட்களாக நடந்த இச்சண்டையில் 120 பேர் பலியாகினர். பல ஆயிரக்கணக்கான மக்கள் தலைநகர் சனாவை விட்டு வெளியேறி வருகின்றனர். இந்நிலையில் கடந்த இருநாட்களாக இருதரப்பினருக்கிடையிலான சண்டை திடீரென நிறுத்தி வைக்கப்பட்டது.

இதற்கிடையில் ஏமனின் தென்பகுதியில் உள்ள அப்யான் மாகாணத் தலைநகர் ஜின்ஜிபார் என்ற நகரை ஆயுதம் ஏந்திய அல்கொய்தா பயங்கரவாதிகள் கைப்பற்றியதாக தகவல்கள் வெளியாகின. எனினும் அவர்கள் அல்கொய்தாவைச் சேர்ந்தவர்கள் தானா என்பது உறுதி செய்யப்படவில்லை.

அரசியல் நிபுணர் அமின் அல் ஹிம்யாரி இது தொடர்பாக கூறியதாவது: அவர்கள் அல்கொய்தாவினர் அல்ல. அதிபரின் ஆதரவாளர்கள் தான். ஏற்கனவே, தான் பதவி விலகினால் நாடு அல்கொய்தா வசம் போய்விடும் என்று நாடகம் போட்டார் அதிபர். இப்போது இச்சம்பவத்தைக் காட்டி அதிபராகத் தொடரலாம் என்ற நப்பாசையில் தனது ஆதரவாளர்களை ஏவி விட்டுள்ளார்.

அவரது கூற்றை உறுதிப்படுத்தும் விதத்தில் ஜின்ஜிபார் பகுதியைச் சேர்ந்தவர்களும் அந்த வீரர்களை அல்கொய்தாவினர் என்று கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது எனத் தெரிவித்தார்.



# குறள் சொல்லும் கதைகள் -43

இன்பத்துப் பால்

# இடம் தேவை

அறைக்குள் வந்த வித்தியா விம்மி விம்மி அழுதாள். அவளால் துக்கத்தைத் தாங்க முடியவில்லை. இதயத்துள் வெடிகுண்டுகள் அடுத்தடுத்து வெடிப்பதைப் போன்று இருந்தது. கஜேந்திரன் பலசாலி. மிகுந்த ஆண்மையுள்ளவர். எனினும் என்முன் மிகமிகப் பலவீனமானவன். நான் அருகில் இருந்தால் உலக நினைவே அவருக்கு இராது. எந்த விஷயத்தையும் பெரிதாக எண்ணாமல் இலகுவாகக் கருதும் அவரது மனம், நான் பிரிந்தால் எவ்வாறு அல்லற்படும். என்மீது தனக்குள்ள காதலை எப்படியெல்லாம் வெளிப்படுத்தியுள்ளார். அவர் எனக்குப் பின்னால் பல மாதங்களாக நாயாய் அலைந்த போது அவரை விலக்கியிருக்கலாம் . நான் இன்னொருவனுக்கெனத் தீர்மானிக்கப்பட்டவள் என்று சொன்ன போதும் அவர் கேட்கவில்லையே.

வித்தி, நீ இன்னொருவனுக்கெனத் தீர்மானிக்கப்பட்டவளாக இருக்கலாம். ஆனால் இந்த விஷயத்தை நீ தீர்மானிக்க வேண்டும். என்னவோ தெரியவில்லை என்மனம் உன்னையே நாடுகிறது. நீ என்னைப்பலமுறை அலட்சியம் செய்தாய். பலருக்கு முன் அவமானப்படுத்தினாய். பலமுறை செருப்பைக் கழற்றிக் காட்டினாய். இருந்தபோதும் நான் கோபப்படவில்லை. வெட்கப்படவில்லை. உன்னை நேசித்தேன். தீவிரமாக நேசித்தேன் இதற்குக் காரணம் உனக்குத் தீர்மானிக்கப்பட்டவனை நீ விரும்பவில்லை. அதை நீ வெளிப்படையாகச் சொல்லாவிட்டாலும் உனது செயல்களும் வார்த்தைகளும் எனக்குப் புலப்படுத்தின. அவனை விரும்பினால் சொல்லு, நான் விலகிச் செல்கிறேன். என்னுள் விளைந்து பெருகியிருக்கும் உனது நினைவுகளை உன்னால் எடுத்துச் செல்ல முடியாது. அது நான் இறந்த பின்பும் எனது பிறவிகள் தோறும்கூட வரும். காதலைப் பற்றி உனக்குத் தெரியாது. அது அணுவைவிடச் சிறியது. மலையை விடப் பெரியது. பிளக்க முடியாத சின்னஞ்சிறிய அணு உலகையே அழிக்கும் தன்மை உடையது. அது மாதிரித்தான் காதல், உலகை உலுப்பக்கூடியது. உலகை மாற்றக்கூடியது. ஆக்கவும் அழிக்கவும் வல்லது. மலையைப் போலக் காதல் உறுதியானது. தகர்க்க முடியாதது, உயர்ந்த இலட்சியங்களைக் கொண்டது.

“இப்படியெல்லாம் சொல்லும் நீங்கள் மென்மையான மனதையும் எதையம் அலட்சியம் செய்யும் தன்மையையும் ஏன் கொண்டுள்ளீர்கள். உங்களைப் பிரிந்து என்னாலும் உயிர் வாழ முடியாது. அம்மா வற்புறுத்தித் திருமணம் செய்து வைத்தால் நான் இறந்து விடுவேன்” அழுதாள் வித்தியா.

“இஞ்சை என்ன செய்கிறாய்” மாமாவோடு வந்து கதை, பல வருடங்களுக்குப் பிறகு வந்திருக்கிறார். சாப்பிடச் சொன்னேன். நீ வரட்டும் என்று சொன்னார். வா, வந்து சாப்பிடு” என்றாள் இலட்சுமி.

“இந்த இக்கட்டில் இருந்து எப்படித் தப்புவது? அங்கஜனைக் கடைசி வரையும் திருமணம் செய்ய முடியாது அவரை நான் விரும்பவே இல்லை” விம்மினாள்.

‘வித்தி, காதல் என்பது முற்பிறப்புத் தொடர்பால்தான் ஏற்படுகிறது. விதி, ஊழ் இவற்றிற்கும் உறவுக்கும் தொடர்பிருக்கிறது. ஓர் ஆண் இலட்சக்கணக்கான பெண்களைப் பார்க்கிறான். அதேபோல ஒரு பெண் இலட்சக்கணக்கான ஆண்களைப் பார்க்கிறாள். ஆனால் ஒருவரைத் தானே காதலிக்கிறாள். இது எப்படி நிகழ்ந்தது.. பூர்வ புண்ணியப் பலன் என்றுதான் சொல்ல வேண்டும். என்னால் உன்னை மறக்க முடியாது. அதனால் தான் பேயாக உன்பின்னால் அலைகிறேன். என் இருதயத்துள் நீ இருக்கிறாய். கண்களுக்குள் உன்னை வைத்துப் பூஜிப்பதற்காக என் கண்ணின் கருமணியில் உள்ள பார்வையை என் கண்ணை வீட்டு அகன்று சென்று விடுமாறு இரக்கிறேன். அப்படி என் கண்ணின் கருமணிக்குள் இருக்கும் பாவையாகிய நீ அகன்று செல்லாவிட்டால் நான் விரும்பும் என் கண்ணைப் போன்றவள் இருக்க இடமில்லாமல் போய்விடும்” கஜேந்திரன் கூறியது அவளது செவிகளில் ஒலித்தது.


அவ்வார்த்தைகளின் கொடுமையைத் தாங்க முடியாது விம்மி விம்மி அழுதாள் வித்தியா. அளவுக்கதிகமான துயரத்தால் அவளது இதயம் வெடித்து விடும் போலத் தோன்றியது. “பிள்ளை வித்தியா” என்று அழைத்தவாறு இலட்சுமி வந்தாள்.

**கே.வி.குணசேகரம்**

கருமணியில் பாவாய் நீ போதாய், யாம் வீழும்
திருநுதற்கு இல்லை இடம். 1123

என் கண்ணின் கருமணியில் உள்ள பாவையே! நீ என் கண்ணை விட்டுப் போய்விடு, நீ போகாவிட்டால் நான் விரும்புகின்ற பெண்ணுக்கு என் கண்ணில் இருக்க இடம் இல்லாமல் போய்விடும்.

# சமூகத்தின் சீர்கேடாகியுள்ள புகைத்தல்; தடுப்பதற்கான வழிதான் என்ன?



இன்று சர்வதேச புகைபிடித்தல் தினத்தை ஒட்டி இவ் ஆக்கம் பிரசுரமாகிறது.

சாதாரண விடயமாகக் கருதப்படும் புகைபிடிக்கும் பழக்கம் மறக்க முடியாத ஒன்றாக தொடர்ந்து வருவதைக் காணக்கூடிய தாகவுள்ளது.

இன்று புகைத்தல் பழக்கம் இளையோர், பாடசாலை மாணவர்களிடையேயும் இயல்பாகி வரு வதும், இவர்கள் இப்பழக்கத்தினால் பலியாகும் அபாயம் உண்டென்பதும் கவலை தரும் விடயமாகவுள்ளது. இது சமூகத்தின் உயிர்த்துடிப்பானவர்களை நசுக்கும் நச்சுத்தன்மை வாய்ந்த செயலாகவும் கருதப்பட்டு வருகின்றது.

உலகில் மனித இறப்புகளைத் தோற்றுவிக்கும் முக்கிய காரணிகளில் புகைபிடித்தலும் ஒன்றாகும். புகைத்தலால் தனக்கும் பிறருக்கும் ஏற்படும் தீங்குகளில் இருந்து தவிர்த்துத் கொள்வதை வலியுறுத்துவதாகவே ஆண்டு தோறும் சர்வதேச புகைத்தல் எதிர்ப்புதினம் அனுஷ்டிக்கபடுகின்றது. இதனால் புகையிலை சம்பந்தமான இறப்புகளைக் குறைக்க முடியுமென உலக சுகாதார நிறுவனம் எதிர்பார்க்கின்றது.

ஒரு நபர் புகை பிடிப்பதால் அவருக்கு ஏற்படும் தீமைகளை விட, அவர் வெளிவிடும் புகையை சுவாசிப்பவர் அதிகமாகப் பாதிக்கப்படுவதாகவும், புகையை சுவாசிக்க நேரிடும் குழந்தைகளுக்கு குணாதிசயங்களில் எதிர்மறை விளைவுகள் ஏற்படலாமென சிட்னி பல்கலைக் கழக ஆய்வுகள் எச்சரிக்கின்றன.

புகைப் பொருட்களில் மனித குலத்திற்கு பேராபத்தை ஏற்படுத்த கூடிய அதி சக்திவாய்ந்த நச்சுப் பொருட்கள் காணப்படுகின்றன. இதனையே புகைப்பிரியர்கள் வாழ்நாளில் அனுபவித்து வருகின்றனர்.

புகையிலையில் காணப்படும் நிக்கோட்டின் (Nicotin) புகைப் பிடித்தல் ஊடாக சுவாசப் பாதைகளின் வழியாக குருதியை அ்டைகின்றது. குருதியில் காணப்படும் நிக்கொட்டின் மனித மூளையின் மனநிலையினை மாற்றும் கலங்களுக்குச் சென்று விடுகின்றது. இதனால் புகையின்பத்தில் உள்ளவர் ஓர் ஆறுதலான நிலையை அடைவதாக ஒரு மாயையை தோற்றுவிக்கின்றது. இவ்வாறான நிலை புகைப்பவர்களுக்கு மன அழுத்தங்கள் பிரச்சினைகள் எல்லாம் குறைந்த மாதிரி தோன்றுவதும், இதனால் புகைபிடிக்காத நேரங்களைவிட, புகைக்கும் நேரங்களில் கூடிய விடயங்களில் கவனம் செலுத்தக் கூடிய ஒரு நிலையில் தாங்கள் இருப்பதாக அவர்கள் எண்ணுவார்கள். இவ்வாறாக இவர்கள் போதை அடிமை நிலையினைத் தொடர்வார்கள்.

இவர்கள் உடலாலும் மனத்தாலும் நிக்கோட்டினில் தங்கி இருக்கும் ஒரு வேண்டாத பழக்கத்திற்கு ஆளாகின்றனர். இந்நிலையில் உள்ளவர்களின் இரத்தத்தில் நிக்கோட்டின் அளவு குறைந்ததும் அவர்களுக்கு புகைபிடிக்க வேண்டும் என்ற தவனம் ஏற்பட்டு விடுகிறது.

இதன் காரணமாகவே பலர் பணத்தையும் விரயமாக்கி உடல்,உள நலன் பாதிக்கப்படுகின்றதென்பது தெரிந்தும், தமது ஆரோக்கியத்தில்

**டாக்டர்.அ.பிறிற்ரோ டக்ளஸ்**

அக்கறை கொள்ளாது புகைத்தலை கைவிட முடியாது உள்ளனர். ஆனாலும் புகைத்தலை நிறுத்துவது அவசியமென உணராமலும் இருக்கவில்லை.

இருமல்,காசம்,ஆஸ்மா போன்ற சுவாச நோய்களைத் தவிர்க்கவும் பற்களின் பழுப்பு நிறம் நீங்கி வெண்மைபெறவும்,இருதய நோய்களை தடுக்கவும், புற்று நோய்கள் வருவதற்கான காரணங்களைக் குறைக்கவும், வயதாகும் காலத்தில் பார்வை இழப்பினைத் தவிர்க்கவும்,பாலியல் பலவீனம் மற்றும் அவலட்சணமான தோற்றத்தை தவிர்த்து அழகானவர்களாக மாறவும் புகைத்தலைத் தவிர்க்க வேண்டியுள்ளது.

படிப்படியாக புகைத்தலை நிறுத்தி விடலாம் என எண்ணுவது சாத்தியப்படுவதில்லை. ஏனெனில், மீண்டும் அவர் பழைய நிலைக்கு, திரும்பும் சாத்தியங்கள் அதிகம் உண்டு. எனவே இனிப் புகைப்பதில்லை என்ற முடிவை உறுதியாக எடுத்து உடன் நிறுத்துவதே சிறந்த வழியாகும்.

புகைத்தலை நிறுத்த விரும்புபவர்கள் சர்வதேச புகையிலை எதிர்ப்பு தினமாகிய இன்றே நிறுத்திவிடுங்கள். புகைத்தலை நிறுத்துவது மனம் சார்ந்த விடயமாகும். மன உறுதியும் விருப்பமும் இருந்தால் புகைத்தலை நிறுத்திவிடல

புகைத்தல் எமது சமூகத்தின் சீர்கேடாகும் என பிரசாரங்கள் தலையெடுக்குமானால், புகைப் பிரியர்களின் மனசாட்சி அடுத்தவர்களை நேசிக்குமானால் புகைப் பொருட்களின் பாவனைகளில் இருந்து எமது சமூகம் விடுபடும். ●

# மனித உரிமைகள், நம்பகத் தன்மை மற்றும் பொறுப்புக் கூறல்

**என்.சத்தியமூர்த்தி**

போரினால் உருக்குலைந்துபோன வடக்கு - கிழக்கில் மனித உரிமை மீறல சம்பவங்களை ஒவ்வொன்றாக விசாரிப்பதற்கென உயர்மட்ட, அனுபவம் வாய்ந்த நீதிபதிகளை நியமிக்க இலங்கை மனித உரிமை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இந்தத் தீர்மானம் அரசாங்கத்தினால் நன்கு ஆலோசித்து எடுக்கப்பட்டுள்ளமையை விளங்கிக்கொள்ள முடியும். தருஸ்மன் அறிக்கையின் பின்னணியில் நோக்கும்போது இது காலம்பிந்திய நடவடிக்கையாக இருப்பினும்,மனித உரிமை விடயத்தில் சர்வதேச சமுதாயத்தின் அக்கறையை எதிர்கொள்ள இது ஒரு நல்ல அடிப்படையை வழங்க முடியும்.

இந்தத் தீர்மானம் சர்வதேச அளவில் இலங்கையின் நண்பர்களைக் கருத்தில் கொண்டே எடுக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. உலகின் தெற்கு நாடுகள் இலங்கைக்கு உதவி செய்வதற்கு உதவும் முகமாக அரசாங்கம் இதைச் செய்துள்ளது.

குறிப்பாக தருஸ்மன் அறிக்கையின் அடிப்படையில் இலங்கை அரசாங்கத்தின்மீது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் ஐ.நா. மற்றும் வேறு இடங்களில் முன்வைக்கப்படும் போது இலங்கையின் நட்பு நாடுகளுக்கு இது பயன்படும்.

இலங்கை அரசாங்கம், சர்வதேச சமூகத்துக்கு, குறிப்பாக அதன் நண்பர்களுக்கு, தான் நேர்மையாகச் செயற்படுவதாக காட்ட வேண்டியுள்ளது.

உலகின் கவனம் வேறு முக்கிய நெருக்கடிபற்றி அக்கறை கொள்ளும் வரை காலம் கடத்துவதற்காகவே இலங்கை, விசாரணைக் குழுக்களை அமைக்கின்றது என்ற கருத்து பரவலாக உள்ளது. நீதிபதி பகவதி குழு இதற்கு உதாரணமாகும்.

அரசாங்கம் அதன் நண்பர்களுக்கு தொடர்ந்து அலுப்புக் கொடுக்க முடியாது. யுத்தத்தின் இறுதி நாட்களில் என்ன நடந்தது என்பதை மீள்பார்வைக்கு உட்படுத்த வேண்டும். இதன்மூலம் இந்தப் பிரச்சினையை வைத்துக்கொண்டு சர்வதேச சமூகம் இலங்கையை இக்கட்டான, சங்கடமான நிலைமைக்கு உட்படுத்துவதை தவிர்க்க முடியும்.

ஆரம்பத்திலிருந்தே தருஸ்மன் அறிக்கை நம்பகமற்ற ஒன்றாகவே உள்ளது. இலங்கைக்கு 'வீட்டோ' அதிகாரமுள்ள ரஷ்யா, சீனா போன்ற நாடுகள் நண்பர்களாக உள்ள நிலையில், ஐ.நா.வின் பாதுகாப்பு சபை, மனித உரிமை கவுன்ஸில் என்பவற்றில் இந்த அறிக்கை ஏற்கப்படும் என யாரும் கருதியிருக்க முடியாது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பையும் அரசாங்கத்தின் பாதையில் சென்று சீனாவிடமும் ரஷ்யாவிடமும் உதவி கோரவைத்ததே தருஸ்மன் அறிக்கையின் சாதனையாகும்.

ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ மூன் அவர்களுக்கு ஆலோசனை கூறுவதற்காக நியமிக்கப்பட்ட தருஸ்மன் குழு, ஏதோ ஒரு வகையில் வழக்குத்தொடருநராக மாறிவிட்டது. கடந்த காலங்களில் சமாதானப் பேச்சுவார்த்தையின் ஏற்பாட்டாளர்கள் போல, இந்தக் குழுவும் நடந்துள்ளது. சீனாவும் ரஷ்யாவும் எந்த வடிவில் வந்தாலும், எப்போது வந்தாலும் இந்த அறிக்கையை எதிர்க்கும் என நன்கு தெரிந்திருந்தபோது, ஒரு ஆலோசனைக் குழுவை நியமிப்பதனால் பான் கீ மூன் எதனைச் சாதிக்க நினைத்தார்?

இந்த அறிக்கை இலங்கை அரசாங்கத்தை இக்கட்டான நிலைக்கு உள்ளாக்கியது என்பது உண்மையே. இலங்கை அரசாங்கத்தின்மீது ஒரு நீதிமன்றத்தில் இந்த அறிக்கையை முதல் தகவல் அறிக்கையாக (எப்.ஐ.ஆர்) கொண்டு யாராவது வழக்குத் தாக்கல் செய்தால் ஐ.நா. இந்த அறிக்கையை ஆராய வேண்டியிருக்கும்.

இதுவே எதிர்பார்க்கப்பட்ட நோக்கமாக இருந்தால் அது அடையப்பட்டுவிட்டது. அரசியல் நோககில், புலம்பெயர்ந்தோர் குழுக்களுக்கு இந்த அறிக்கை சில பிழையான நம்பிக்கைகளை கொடுத்திருக்கலாம். சகலதும் கைவிட்டுப்போன நிலையில், புலம்பெயர்ந்தோரில் சிலருக்கு இது எதிர்காலம் தொடர்பில் நம்பிக்கையை கொடுத்திருக்கலாம். சர்வதேச சமூகம் புலிப் பயங்கரவாதத்தை இரும்புக் கரம் கொண்டு நசுக்க தற்போதும் தயா ராக இருப்பதையே நெடியவன் நோர்வேயில கைது செய்யப்பட்டமை வெளிப்படுத்துகின்றது. குமரன் பத்மநாதனை (கே.பி) டச்சு அதிகாரிகள் சந்திப்பதற்கு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கான இலங்கையின் பதிலானது இன்னும் நீடிக்கும் பொது கரிசனைகளைக் காட்டுகின்றது. ●

# ராஜபக்ஷவைத் தண்டிக்க முடியுமா?

தமிழகத்தைப் பொறுத்தவரை நீண்ட நெடுங்காலமாக இலங்கைத் தமிழர் பிரச்சினை என்பது மோட்டார் சைக்கிள்களில் பொருத்துகிற 'எக்ஸ்ட்ரா ஃபிட்டிங்' மாதிரி இருந்து கொண்டிருக்கிறது. இலங்கைத் தமிழர்கள இவ்வளவு கஷ்டங்களையும் அனுபவிக்கக் காரணமே, அவர்கள் நடுவே எழுந்த தீவிரவாத ஆயுதப் போராட்டம்தான் என்பது உலகமறிந்த சமாச்சாரம்.

தீவிரவாதம் உலகத்தில் எங்கே இருந்தாலும் அதைத் தண்டனிட்டு வணங்கித் தொழ வேண்டும் என்று தமிழ்நாட்டில் பழ.நெடுமாறன், வைகோ, வீரமணி (இப்போது சீமான்) போன்ற சிலர், தமிழ் மக்களுக்குப் போதனை செய்வதை வாடிக்கையாகக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் தங்களுடைய தீவிரவாத ஆயுதப் போராட்ட ஆதரவுகளை மனிதநேயம், இன விடுதலை என்று என்னென்னவோ சொல்லி நியாயப்படுத்துகிறார்கள்.

தமிழ்நாட்டில் தீவிரவாதம் என்பதே இந்த இலங்கைக் குழுக்களால்தான் அறிமுகமாயிற்று. சென்னை பாண்டிபஜாரில் பிரபாகரனும், உமா மகேஸ்வரனும் துப்பாக்கியால் சுட்டுக் கொண்டார்கள். பிறகு சென்னை விமான நிலையத்தில் இந்த இலங்கைத் தீவிரவாதக் குழுக்களால் வெடிக்கப்பட்ட குண்டு பலரைக் கொன்றது. பாலசிங்கம் வீட்டில் குண்டு வெடித்தது. சபாரத்தினம், பத்மநாபா, உமா மகேஸ்வரன்... என்று சக போராட்டக் குழுத் தலைவர்களையே ஆயுதப் போராட்டப் போட்டியில் கொன்று குவித்தனர். கடைசியில் ராஜீவ் காந்தியையும் கொன்றார்கள்.

இவை எல்லாமே இன விடுதலைக்கான போராட்டம்தான் என்று இந்த நெடுமாறன்களும், வைகோக்களும், வீரமணிகளும் சப்பைக்கட்டு கட்டினார்கள். இன்றும் 'இலங்கைத் தமிழ் இன விடுதலை, தமிழ இன விடுதலை' என்று அரற்றிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் மூடர்களுக்குக் குறைவு இல்லை. யார் பேசினாலும் கேட்பதற்கும், கை தட்டுவதற்கும் இங்கே ஒரு கூட்டம் இருக்கிறது.

இப்போது கொஞ்ச காலமாக ராஜபக்ஷவைத் தண்டிக்க வேண்டும் என்று இந்தக் குட்டித் தலைவர்கள் பேசிக் கொண்டு திரிகிறார்கள். ஐ.நா. சபையுடன் சேர்ந்து ராஜபக்ஷவைத் தண்டிக்க மத்திய அரசு முயற்சிக்க வேண்டும் என்கிறார்கள்.

இலங்கைத் தமிழர்களைக் குஷிப்படுத்துவதற்காக ராஜபக்ஷவை தமிழ்நாட்டில் வில்லனாகச் சித்திரிக்கிறார்கள். வைகோ, நெடுமாறன், திராவிடர் கட்சிகள் முதலானவை இலங்கைத் தமிழர்களைக் கொஞ்சுவதைப்பார்த்து, நாமும் கொஞ்சவில்லை என்றால், நமது அரசியல் செல்வாக்கு குறைந்து விடுமோ என்று பயந்து பாரதிய ஜனதா முதல் தி.மு.க., அ.தி.மு.க. வரையிலான பெரிய கட்சிகளும் அவ்வப்போது இலங்கைத் தமிழர்களைக் கொஞ்சிக் குலாவுகின்றன.

ராஜபக்ஷவின் உள்நாட்டுப் போர்க் குற்றத்தை விசாரிக்க வேண்டுமென்றால், ஐ.நா.வில் தீர்மானம் கொண்டு வர வேண்டும். அப்படி ராஜபக்ஷவுக்கு எதிராகத் தீர்மானம் வந்தால், அதை இலங்கையின் நண்பர்களான சீனாவும், ரஷ்யாவும் ஆதரிக்காது. தவிர, ராஜபக்ஷவும் இதற்கு உடன்பட வேண்டும். இதெல்லாம் அத்தைக்கு மீசை முளைத்து சித்தப்பா ஆகிற கதைதான்.

இதெல்லாம் வைகோ, நெடுமாறன், வீரமணி முதலான குட்டி அரசியல்வாதிகளுக்குத் தெரியாத சமாச்சாரமல்ல. அவர்களைப் பொறுத்தவரை, தமிழர்கள் என்றால் சர்வ மடையர்கள், அரசியல் அறிவிலிகள். முடிந்தவரை அவர்கள் காதில் பூ சுற்றிப் பார்ப்போமே என்றுதான் 'ராஜபக்ஷவைத் தண்டி, ராஜபக்ஷவைத் தண்டி' என்று தமிழ்நாட்டில் எங்கோ ஒரு மூலையில் நின்று கொண்டு சத்தம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். ●

**துர்வாசர்**

# சிகிச்சைக்கு சென்ற சிறுமி மீது வைத்திய அதிகாரி தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்குச் சென்ற சிறுமி ஒருவர் மீது வைத்தியர் ஒருவர் தாக்குதல் நடத்தியுள்ளார்.

நேற்றுக்காலை நடைபெற்ற இச்சம்பவத்தில் பாங்சால் வீதியைச் சேர்ந்த எஸ்.மேரி சுலக்ஷனா (வயது-16) என்னும் சிறுமியே தாக்குதலுக்குள்ளானவர் ஆவார்.

இது குறித்து அந்தச் சிறுமியிடம் கேட்டபோது, கடந்த சனிக்கிழமை இரவு காதினுள் பூச்சி ஒன்று சென்றுள்ளது. இதற்கான சிசிச்சைக்காக நேற்றுக் காலை வெளிநோயாளர் பிரிவுக்குச் சென்ற போது அவரைப் பரிசோதித்த வைத்தியர் 17 ஆம் விடுதியில் தங்கிச் சிசிச்சை பெறுமாறு கூறினார்.

அதன்படி 17ஆம் விடுதிக்குச் சென்று அங்கிருந்து காது-மூக்கு-தொண்டை கிளினிக்குக்கு அனுப்பப்பட்டார்.

அங்கு அவரது காதினுள் இருந்த பூச்சியைக் குறித்த பெண் டாக்டர் வெளியில் எடுக்க முயன்றார். அதன்போது சிறுமி வலி பொறுக்க முடியாது அசைந்துள்ளார். அப்போது சிறுமி மீது மருத்துவரால் தாக்குதல் நடத்தப்பட்டது. குறித்த பெண் வைத்தியர், 'போய் வாட்டில் இரு' என்று கூறிப் பேசியுள்ளார்.

சிறுமி அழுதபடி வைத்தியசாலையில் நின்றதைக் கண்ட வைத்தியசாலை பாதுகாப்புப் பணியாளர்கள் சிறுமியை உபசரித்து பதில் பணிப்பாளரிடம் அழைத்துச் சென்று விளக்கினர்.

அதன்பின் உறவினர்களுடன் தொடர்பு கொண்ட பாதுகாப்பு பணியாளர்கள் சிறுமியை ஒப்படைத்தனர். இந்தச் சம்பவம் குறித்து பலரும் விசனம் தெரிவித்துள்ளனர். (கா)

## ஐ.நா.மனித உரிமைகள்...

இடம்பெற்ற யுத்தத்தின் இறுதிக் கட்ட மோதலில் அரசாங்கப்படைகளும் தமிழீழ விடுதலைப் புலிகளும் சர்வதேச சட்டங்களை பாரிய அளவில் மீறியுள்ளதாக சான்றுகளைக் கொண்ட குற்றச்சாட்டுக்கள் இருப்பதாக ஐநா நிபுணர் குழு தனது பொறுப்புக்கூறுவது தொடர்பான அறிக்கையில் முடிவாகத் தெரிவித்துள்ளது குறித்தும் அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் நியமித்த நிபுணர் குழு அறிக்கையில் இலங்கை மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை விசாரிக்க வேண்டியது அந்நாட்டின் கடமையாகுமென நவநீதம்பிள்ளை சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச பொறிமுறை ஒன்றை அமைத்து தேசிய மட்டத்தில் மேற்கொள்ளப்படும் விசாரணையை கண்காணிக்க வேண்டும் என்ற சிபாரிசை தான் ஆதரிப்பதாகவும் தேவையானால் அதனை சுயமாகவும் முன்னெடுக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை பற்றிய முன்னர் இடம்பெற்ற பரிசீலனையினதும் உலகம் முழுவதிலுமான சண்டையிலிருந்து விலக்களித்தல் ஆகியவற்றின் பின்னணியில் இம்முக்கிய அறிக்கையில் உள்ள புதிய தகவலை ஏற்றுக் கொண்டு மனித உரிமை சபை தனது நிலையை வெளிப்படுத்த வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

அதேவேளை, மேற்படி மனித உரிமைகள் பேரவையின் மகாநாட்டில் ஐ.நா. நிபுணர் குழு அறிக்கைக்கு சாதகமாகப் பல நாடுகளின் பிரதிநிதிகள் தமது ஆதரவைத் தெரிவித்துக் கொண்டன.

மேற்படி குற்றச்சாட்டுக்களுக்கு பதில் வழங்கும் வகையில் அமைச்சர் மகிந்த சமரசிங்க அங்கு உரை நிகழ்த்தினார்.

ஐ.நா. நிபுணர் குழுவில் இலங்கை குறித்து கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை என்று அங்கு பேசிய ஐநா மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கான இலங்கையின் சிறப்புத் தூதுவரான அமைச்சர் மகிந்த சமரசிங்க அங்கு தெரிவித்தார்.

இலங்கையில் ஆயிரக்கணக்கான மக்கள் இலங்கை இராணுவத்தால் கொல்லப்பட்டதாக ஐ.நா. நிபுணர்குழு அறிக்கை கூறுவதற்கு எந்தவிதமான அடிப்படையும் கிடையாது என்று அவர் கூறியுள்ளார். இத்தகைய உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளமை முற்றிலும் தவறானது என்றும் அமைச்சர் மஹிந்த சமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, இலங்கை அரசாங்கம் அங்கு தேசிய நல்லிணக்கத்துக்காக பல நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் அவை படிப்படியாக பலன் தந்து கொண்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, இலங்கை போர் குறித்த ஐ.நா. செயலரின் நிபுணர் குழுவின் அறிக்கைக்கு ஆதரவாக வேறுபல நாடுகளும் அங்கு பேசியிருக்கின்றன. ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் ஆகியவற்றின் பிரதிநிதிகள் நிபுணர் குழுவின் அறிக்கையை வரவேற்றதுடன், அதன் பரிந்துரைகளை இலங்கை அமல்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள்.

ஆனால், இலங்கை விவகாரத்தை ஐநா மனித உரிமைக் கவுன்சில் மீண்டும் எடுத்திருப்பது ஐநாவின் இரட்டைப் போக்கைக் காண்பிப்பததாக கியூபாவின் பிரதிநிதியான றோடொல்ஃப் ரீயிஸ் றொட்ரிகஸ் பேசினார். வளரும் நாடுகளை உலக சக்திமிக்க நாடுகள் அடக்கப் பார்ப்பதாக அவர் குற்றஞ்சாட்டினார்.

இலங்கை அரசாங்கமும், இலங்கை மக்களும் தமது உள்ளூர் விடயங்களை தாமே கையாளும் வல்லமை உள்ளவர்கள் என்று கூறிய சீனாவின் பிரதிநிதி, அதற்கு ஐ.நா. தனது ஆதரவை வழங்க வேண்டும் என்று கூறினார்.

## தனியார் ஓய்வூதியத்...

தொகையை வட்டியுடன் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

உத்தேச சட்டமூலம் குறித்து சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரிடமும் கருத்துக்களை பெற்று திருத்தங்களை மேற்கொண்ட பின்னரே அது நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் எனவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

## உலக நாடுகள்...

உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் நாடுகள் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடாது என சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் ஏற்கனவே கோரிக்கை விடுத் துள்ளன.

அதேவேளை, மேற்படி சர்வதேச அழுத்தங்கள் காரண மாக மேற்படி மகாநாட்டின் நிகழ்ச்சி நிரலிலும் அரசு பெறும் மாற்றத்தைக் கொண்ட வந்திருக் கிறது.

இம்மகாநாடு நடாத்துவற்கு ஆரம்பத்தில் திட்டமிடப்பட்ட போது இராணுவ வெற்றியின் இரகசியங்கள் என்ன? என்றும், புலிகளை முறியடிக்க அரசு படைகள் கையாண்ட யுத்த தந்திரோபயங்கள் பற்றியும், விமானப்படையின் யுத்த வியூகங்கள் குறித்தும் கடற்படை யணியின் சாதனைகள் குறித்தும் ஆய்வுகளும் செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

ஆனால், தற்போது மகாநாட்டில் நிகழ்ச்சி நிரலை முற்றாக மாற்றம் செய்து படை யினர் மேற்கொண்ட மனிதாபிமானம், முன்னாள் புலிகளை சமூகத்துடன் இணைப்பது எப்படி என்றும், புனர்வாழ்வு நடடிக்கையின் முன்னேற்றம் குறித்தும் அரசியல் நல்லிணக்கத்தை ஏற்படுத்தல், வட கிழக்கு அபிவிருத்தி என்றும் புதிய தலைப்புக்களில் விடய ஆய்வுள் மேற்கொள்வதற்கு மேற்படி தெரிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த நிகழ்ச்சி நிரல் மாற்றத்துக்கு சர்வதேச அழுத்தமே காரணம்ட என்று கருதப்படுகிறது.

## மோப்ப நாய்...

புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவரின் உடையின் ஒரு பகுதியை இந்த நாய் எடுத்து வந்து கொண்டிருந்த போது, திடீரென எதிர்த்திசையில் இருந்த மற்றொரு புலிகள் இயக்க உறுப்பினர் படையினர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதுடன், கைக்குண்டை வீசினார்.

கைக்குண்டு வெடிப்புச் சித றல் ஒன்று ஸ்னோவியின் தலை யில் பாய்ந்து படுகாயமடைந்தது. உடனடியாக அது உலங்குவானூர்தி மூலம் அனுராதபுரத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. பின்னர் அங்கிருந்து பெரதெனியாவில் உள்ள மிருக மருத்துவ போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது.

மிருக மருத்துவ நிபுணர் அசோகா டங்கொல்ல தலைமையிலான மருத்துவ நிபுணர்கள் குழு, சத்திரசிகிச்சை மேற்கொண்டு இந்த நாயைக் காப்பாற்றினர். மிகவும் மோசமான நிலையில் காயமடைந்திருந்த இந்த நாய்க்கு வேறொரு நாயின் குருதியும் ஏற்றப்பட்டது.

இந்த நாய் போரின்போது வழங்கிய பங்களிப்புக்காக 'ரணவிக்கிரம' என்ற பதக்கமும் வழங்கப்பட்டுள்ளது. புலிகளுக்கு எதிரான போரில் பல வெற்றிகளுக்கு இந்த நாய் காரணமாக இருந்ததாக கொமாண்டோப் படைப்பிரிவு அதிகாரிகள் கூறியுள்ளனர்.

குறிப்பாக வேவு நடவடிக் கைளுக்காக மறைந்திருக்கும் புலிகள் இயக்க உறுப்பினர்களை காடுகளில் தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கையிலும், ஆழ ஊடுருவும் அணிகளுக்கான வழிகாட்டியாகவும் இந்த நாய் செயற்பட்டுள்ளது.

இந்த நாயின் இழப்பு கொமாண்டோப் படைப்பிரிவின் வழிகாட்டும் குழுக்களுக்கு பேரிழப்பு என்றும், அந்தப் படைப்பிரிவின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். உயிரிழந்த நாய் கணேமுல்லவில் உள்ள கொமாண்டோ றெஜிமென்ட் தலைமையகத்தில் இராணுவ மரியாதைகளின் பின்னர் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் இராணுவ அதிகாரிகள் மற்றும் கொமாண்டோ படையினரும் கலந்து கொண்டனர்.

# சூறு சூறுப்புடன் மீள்குடியமர்பு



(கொழும்பு)

கடந்த 21ஆண்டுகளாக அதி உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த மாவிட்டபுரம் பகுதியில் தற்போது மீள்குடியேற்றம் செய்யப்பட்டு வருகிறது. அகதி முகாம்களிலும், நண்பர்கள், உறவினர்கள் வீடுகளிலும் வாழ்ந்த மக்கள் தற்போது அப்பகுதிக்கு சென்று தமது காணிகளையும், வீடு வாசல்களையும் துப்பரவு செய்து வருகின்றனர்.

அப்பகுதிக்கு சென்றிருக்கும் மக்கள் தங்கள் வீதி எது? காணி எது? என்று அடையாளம் காண முடியாத அளவிற்கு பற்றைக் காடுகள் வளர்ந்துள்ளன. வீடுகளும், கோவில்களும் ஆதிகால கட்டட எச்சங்களைப்போன்று காட்சி அளிக்கின்றன.

காட்டுப் பன்றிகளும், விச ஜந்துக்களும் சுதந்திரமாக இப் பகுதியில் உலாவி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

# விவசாயிகளுக்கு துப்பாக்கிகள் கிடைக்கும்

(கொழும்பு)


வனவிலங்குகளிலிருந்து தமது பயிர்ச்செய்கைகளை பாதுகாத்துக்கொள்ளும் முகமாக விவசாயிகளுக்கு துப்பாக்கிகள் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக கமநல சேவைகள் மற்றும் வன ஜீவராசிகள்துறை அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார். பயிர்கள் அழிக்கப்படுவதால் விவசாயிகள் பாரிய இழப்பை எதிர்நோக்குவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பதுளையிலுள்ள ஊவா மாகாண நூல்நிலைய கேட்போர் கூடத்தில் "திவி நெகும"என்னும் திட்டம் குறித்த கூட்டமொன்று நேற்றுத் திங்கட்கிழமை நடைபெற்றது. இக்கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

முதலில் கிராம அலுவலர் பிரிவுகள் அடிப்படையில் துப்பாக்கிகள் வழங்கப்படுமெனவும் இது தொடர்பான சுற்றுநிருபம் பிரதேச செயலாளர்களுக்கு விரைவில் அனுப்பிவைக்கப்படும்.

யால மற்றும் வில்பத்து சரணாலயங்களில் பணியாற்றுவர்களுக்கும் துப்பாக்கிகள் வழங்குவதற்கான நடவடிக்கைகளை வனஇலாகா திணைக்களம் எடுக்கவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித் தார்.

# ரஜனி உடல் நலம் தேறி வருகிறார்



நடிகர் ரஜனிகாந்த் அவசர சிகிச்சைப் பிரிவிலிருந்து தனி வார்டுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டதால் தனி வார்டில் வைத்து சிகிச்சையளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தொடரும் சிகிச்சைக்கு ரஜனியின் உடல் நிலை ஒத்துழைப்பு தருவதாக சிங்கப்பூர் மருத்துவர்கள் தகவல் தெரிவித்துள்ளனர்.

சிங்கப்பூரில் உள்ள மவுண்ட் மருத்துவமனையில் கடந்த சனிக்கிழமை முதல் ரஜனிக்கு சிகிச்சை அளித்து வரப்படுகிறது.


## ஜெயலலிதாவைச்...

வழியில் சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் உரையாற்றிய அவர்,


தமிழர் பிரச்சினை குறித்து தம்மைச் சந்திக்குமாறு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா அழைப்பு விடுத்திருந்தார். ஜெயலலிதா என்னைச் சந்திக்க அழைப்பு விடுத்துள்ளது மகிழ்ச்சி தருகிறது. விரைவில் அவரை சந்திப்பேன்.

இலங்கைத் தமிழர் விவகாரம் உள்ளிட்ட அனைத்து பிரச்சனைகள் குறித்து இலங்கை வெளிவிவகார அமைச்சர், இந்தியப் பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சருடன் விவாதித்துள்ளார்.

இந்தப் பேச்சுவார்த்தை தொடர்பான விவரங்கள் கூட்டறிக்கையில் இடம்பெற்றுள்ளது. இரு தரப்பும் ஒப்புக்கொண்ட விடயங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என ரணில் விக்ரமசிங்க வலியுறுத்தினார்.



# உதவிகளிலிருந்து உச்சப் பயன் பெறவேண்டும் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார்



(யாழ்ப்பாணம்)

கிடைக்கப்பெறும் வாழ்வாதார உதவிகளில் இருந்து மக்கள் உச்சப் பயனைப் பெறவேண்டுமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சி பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் லீ்ற்ஸ் நிறுவனத்தின் உதவியுடன் 135 பயனாளிகளுக்கு விவசாயம், சுயதொழில், வியாபாரம் போன்ற வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வழங்கப்படுகின்ற வாழ்வாதார உதவிகள் அனைத்தும் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் சென்றடைய வேண்டும் என்ற கொள்கையினை வகுத்தே நாம் செயற்பட்டு வருகின்றோம்.

மீள்குடியேற்றம் நடைபெற்று 18 மாதங்களை எட்டும் நிலையில் பல அரச சார்பற்ற நிறுவனங்கள் மக்களுக்கு இலவசமாக பல உதவிகளை வழங்கி வருகின்றன. ஆனால் எதிர்வரும் காலங்களில் கொடையாளி நிறுவனங்கள் இலவசமாக உதவிகளை வழங்குமென எம்மால் உறுதிகூற முடியாது.

எனவே கிடைக்கப்பெறும் உதவிகளைப் பயன்படுத்தி தொடர்பயனைப் பெறக்கூடிய வகையில் செயற்பட வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் கரைச்சி பிரதேச செயலர் நாகேஸ்வரன், கரைச்சி பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் அமல்ராஜ், இராணுவ அதிகாரிகளான மேஜர் ராஜபக்ஷ, கப்டன் குமார ஆகியோரும் மற்றும் லீ்ற்ஸ் நிறுவன மாவட்ட அதிகாரி இந்திரன், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் வை.விமலராணி கிராமசேவையாளர் சண்முகநாதன், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், வர்த்தகர்கள், விவசாயிகள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## மாதகலில் தற்காலிக வீடுகள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபைக்குட்பட்ட மாதகல் மாரீசன்கூடல் பகுதியில் அண்மையில் மீள்குடியேறிய மக்களுக்கு தற்காலிக வீடுகள் அமைத்துக் கொடுக்கும் நடவடிக்கைகள் நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

இப்பகுதியில் வீடுகள் அற்ற குடும்பங்களுக்கு இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் வீடுகள் அமைக்கப்படுவதுடன், தனியார் நிறுவனங்களும் வீடுகள் கட்டிக் கொடுக்க முன்வந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

## ரூபவாஹினிக்கு புதிய தலைவர்

(கொழும்பு)

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக சிரேஸ்ட ஊடகவியலாளர் மொஹான் சமரநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக் கடிதத்தை தகவல் ஊடகத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல நேற்றுக் காலை கையளித்தார்.

இவர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் செய்திப் பணிப்பாளராகவும் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் பிரதான செய்தி ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை அலுவலகச் செய்தியாளராகக் கடமையாற்றிய மொஹான் சமரநாயக்க இலங்கை பல்கலைக்கழகங்கள் பலவற்றில் தற்காலிக விரிவுரையாளராகவும் கடமையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிப்பாயின் சடலம் யாழ்.வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்துகொண்ட படைச்சிப்பாய் ஒருவரது சடலம் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் படையினரால் ஒப்படைக்கப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை இராணுவத்தின் 512 ஆவது படைப்பிரிவைச் சேர்ந்த படைச்சிப்பாயே மேற்படி தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்துகொண்டதாக அவ வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இப்படைச்சிப்பாயின் சடலம் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது. (பா)

# மாநகர சபை உறுப்பினர் மீது மர்ம நபர்கள் கொலை முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையின் எதிரணி உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய பிரமுகருமான கனகரத்தினம் விந்தன் மீது துப்பாக்கிச் சூடு நடத்த இனம்தெரியாத நபர்கள் மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிந்துள்ளது.

தனது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு விந்தன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பீடத்தை கேட்டுள்ளதாக அவர் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் காலை அரியாலையில் கனகரத்தினம் விந்தன் அவரது வீட்டிலிருந்து தனது மனைவியுடன் வெளியில் புறப்பட்டபோது வீதியில் நின்ற இனம் தெரியாத இருவர் இவர்களை அவதானித்து விட்டு கைத் தொலைபேசியில் ஏதோ பேசியுள்ளனர் எனவும் இதனை அவதானித்த, விந்தன் அங்கிருந்து சென்றபோது மேற்படி மர்ம நபர்கள் இருவரும் தமது இடுப்பிலிருந்து கைத்துப்பாக்கியை எடுத்துக் கொண்டு விந்தனை துரத்தியுள்ளனர்.

எனினும் அதிலிருந்து தப்பிய விந்தன் அருகிலிருந்த ஒரு வீட்டினுள் தனது மனைவியுடன் தஞ்சம் புகுந்துள்ளார். இதனையடுத்து மர்ம நபர்கள் இருவரும் அந்த வீட்டின் முன்புறமாக நீண்ட நேரம் தரித்து நின்றுள்ளனர்.

இதேவேளை, சம்பவம் தொடர்பாக யாழ் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# பாசிக்குடாவில் 'மாலு மாலு' நவீன உல்லாச விடுதி



மட்டக்களப்பு பாசிக்குடாவில் புதிதாக அமைக்கப்பட்ட 'மாலு மாலு' எனப் பெயரிடப்பட்டுள்ள உல்லாசப் பிரயாண ஹோட்டலை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ நேற்று திறந்துவைத்தார்.

பயங்கரவாதம் முறியடிக்கப்பட்ட பின்னர் கிழக்கு மாகாணத்தின் அழகிய கடற்கரைப் பிரதேசத்தில் முதலில் அமைக்கப்பட்ட நவீன உல்லாசப் பயண ஹோட்டல் இதுவாகும். இதற்காக மூன்று மில்லியன் டொலர்கள் செலவிடப்பட்டுள்ளன.

பாசிக்குடாவில் வாழும் மக்களின் பிரதான பொருளாதார வளம் கடற்றொழிலாகும். இதன் குறியீடாகவே இந்த ஹோட்டலுக்கு 'மாலு மாலு' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

கடல் நீரில் சுழியோடுதல் மற்றும் கடல் நீரில் சறுக்கி விளையாடுதல் போன்ற விநோத சாகசங்களுக்காக இங்கு விசேட வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

# கட்டுநாயக்காவில் ஆர்ப்பாட்ட பொலிஸ் அதிகாரிகள் பலர் கா



(கொழும்பு)

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய ஊழியர்கள் நேற்று மேற்கொண்ட ஆர்பாட்டத்தில் பொலிஸாருக்கும் ஆர்பாட்டக்காரர்களுக்கும் இடையே இடம்பெற்ற மோதலில் பிரதி பொலிஸ்மா அதிபர் ஒருவர் மற்றும் மேலதிக பொலிஸ் அதிகாரி ஒருவர் உள்ளிட்ட 9 பொலிஸார் காயமடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்


தனியார் ஓய்வூதிய திற்கு எதிர்ப்புத் தெரிவித் நாயக்க சுதந்திர வர்த்தக ஊழியர்கள் நேற்றுக் பாரிய ஆர்பாட்டத்தில் ஈடு

இதன்போது ஆர்ப் காரர்களை விரட்டியடிக்க ஸார் கண்ணீர்ப்புகை பிர செய்ததை அடுத்து பெ ருக்கும் ஆர்ப்பாட்டக்கா கும் இடையே மோதல் மூ

இந்த நிலையில் கட்டு சுதந்திர வர்த்தக வலயம் மூடப்படும் என அரசாங்க றிரவு அறிவித்துள்ளது.

கைத்தொழிற்துறை தியை ஸ்திரப்படுத்துவத இத்தீர்மானம் மேற்கொ பட்டுள்ளதாக தெரிவித்து

# கனடாவில் சிறந்த பிராந்தியத் தலை விருது பெறுகிறார் ஈழத் தமிழர்



(ரொறன்டோ)

கனடாவில் தமிழர்கள் பெரும் பா யாக வாழும் ஒன்றாறியோ மாகாணத்தி பழமைசார் கட்சியின் மாநாட்டில் சிறந்த தொகுதிக்கான தலைவர் என்ற விருதை தமிழர் ஒருவர் பெற்றுள்ளார்.

ஒன்றாரியோ மாகாணத்திற்கான பே கட்சியின் சிறப்பு மாநாட்டில் மேற்படி ணத்தில் உள்ள 103 தொகுதிகளிற்கு சிறந்த தொகுதித் தலைவர் என்ற விரு ஈழத்தமிழரான ஹரி ஜெகநாதன் பெற்று தென்னாசியச் சமூகத் பெருமை சேர்த்துள்ளார்.

தென்னாசியர்களுடைய இவ் விருதை முதலில் பெறும் ராக உள்ள ஹரி ஜெகநாதன் கனடியப் பழைமைவாதக் கட் தமிழ் அமைப்பின் பிரதானிகளில் ஒருவராகவும், மேற்படி கட் சுமார் இரண்டு தசாப்தங்களாக இருந்து வருபவரும் ஆவா

ஒன்றாரியோ மாகாணத்தில் முக்கிய சமூகங்களில் ஒன் திகழ்ந்து வரும் தமிழ்த் சமூகத்தின் திறமைகளையும் பண் விழுமியங்களையும் நேர்மையான வகையில் நிலைநிறுத்து காக செயலாற்றி வரும் கனடியத் தமிழ் பழைமைசார் அமை இயக்குனர்களில் ஒருவராகும்.

# சுத்தமான நகரங்களுக்கு விருது வழங்க புதிய திட்ட

(கொழும்பு)

சுத்தமான நகரங்களையும் கிராமங்களையும் தெரிவுசெய்து விருது வழங்கி கௌரவிக்கும் புதிய திட்டம் ஒன்றை சுகாதார அமைச்சு ஆரம்பிக்கவுள்ளது.

டெங்கு, சயரோகம் போன்ற நோய்கள் அதிகரித்துள்ளதையடுத்தே அரசாங்கம் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் இலங்கையின் சுத்தமான பத்து நகரங்கள் மற்றும் பத்து கிராமங்க அதேபோன்று அசுத்தமான நகரங்கள் மற்றும் 10 கி களும் தெரிவுசெய்யப்ப ளன.

சுத்தமான நகரங்கள் ம கிராமங்கள் தொடர்பாக கங்கள் மூலம் பிரசாரம் செ பட்டு விருது வழங்கவும், வேளை அசுத்தமான நகர மற்றும் கிராமங்கள் தொடர் சட்ட நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளத அமைச்சர் மேலும் கூறினார்.

# பாலியல் துஷ்பிரயோகம் இளைஞர்கள் இருவர் கைது

## வவுனியாவில் பொலிஸார் நடவடிக்கை

(வவுனியா)

வவுனியா - மன்னார் வீதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பகல், 18 வயது யுவதியொருவர் மீது பாலியல் துஷ்பிரயோகம் செய்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் பொலிஸாரால் இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் இருவரும் வவுனியா, நெலுக்குளம் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவித்த பொலிஸார், இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட யுவதி வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனவும் குறிப்பிட்டனர்.

முச்சக்கரவண்டியொன்றி மூலம் பலாத்காரமான முறையி அழைத்துச் செல்லப்பட்டுள் இந்த யுவதி குறித்த வீதியி அமைந்துள்ள மறைவிடம் ஒ றில் வைத்து துஷ்பிரயோக துக்கு உட்படுத்தப்பட்டுள்ள என்று பொலிஸ் விசாரணை களிலிருந்து தெரியவந்துள்ள

சம்பவம் தொடர்பான மே திக விசார்ணைகளை வவுனி பொலிஸார் மேற்கொண் வருவதுடன் சந்தேகத்தின் பேரி கைது செய்தவர்களை நீதிம றத்தில் ஆஜர்ப்படுத்தவும் வடிக்கை எடுத்துள்ளனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 மே 31 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.